விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 30 வெள்ளிக்கிழமை (16.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 332

## பெரும்பான்மையை நிரூபிப்போர் ஆட்சியை அமைத்துக் கொள்ளலாம்

### பாராளுமன்றை இனி ஒத்திவைக்கமாட்டேன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதி

பெரும்பான்மையை நிரூபிப்போர் ஆட்சியை அமைக்கலாம் என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாராளுமன்றத்தை இனி ஒத்திவைக்கமாட்டேன் என உறுதியளித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....



## மூன்று பெண் குழந்தைகளை பிரசவித்த தாய் உயிரிழப்பு

### யாழ். போதனாவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒரே தடவையில் மூன்று பெண் குழந்தைகளை பிரசவித்த தாய் ஒருவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.


சாவகச்சேரி சங்கத்தானையை சோந்த ராஜசிறி மாலினி (வயது 49) என்ற குடும்ப பெண்ணே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் திருமணமாகி குழந்தைகள் கிடைக்காத நிலை

24ஆம் பக்கம் பார்க்க....

# யுத்த களமானது பாராளுமன்றம்

## சண்டைக் காட்சிகளும் தாராளம்; எம்.பிக்கள் காயம்; சபை ஒத்திவைப்பு



(கொழும்பு) இலங்கை பாராளுமன்றமானது நேற்றைய தினம் யுத்த களமாக காட்சி தந்தது. பாராளுமன்ற உறுப்பினர்களிடையே மோதல் நிலைமை ஏற்பட்டதுடன் கடும் கூச்சல் குழப்பமாக பாராளுமன்றம் காணப்பட்டது. சில பாராளுமன்ற உறுப்பினர்கள் காயமடைந்ததுடன் பாராளுமன்ற கூட்டத் தொடர் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது. (23-ம் பக்.)

## 14 வயது மாணவன் நீரில் மூழ்கி மரணம்

### வவுனியாவில் சோகம்



(குருமன்காடு)

வவுனியா, பட்டக்காட்டுக்குளத்தில் சக மாணவர்களுடன் நீராட சென்ற 14 வயது மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, தாண்டிக்

24ஆம் பக்கம் பார்க்க....

## ரயிலுடன் கார் மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### அரியாலையில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை நெளுங்குளம் புகையிரத கடவையில் வீதியை

23ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தலுக்குத் தயார் ஐ.தே.க ஆர்ப்பாட்டத்தில் ரணில் சூளுரை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத்தேர்தலையும் ஒரே நேரத்தில் நடத்துவதற்கு தாம் தயாராக உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில்

23ஆம் பக்கம் பார்க்க....

## சபாநாயகர் கரு ஜயசூரியவை தாக்க முயன்ற மகிந்த அணி



(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜெயசூரியவைச் சூழ்ந்துகொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரைத் தாக்க முற்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற வரலாற்றில் சபாநாயகரை நேரடியாகத் தாக்கும் நடவடிக்கையை இன்று (நேற்று) தான் அவதானித்தேன். சபாநாயகர் மீது தும்பிலான குப்பைக்கூடை, கோவையிடும் மட்டைகள், கடதாசிகள் என வீசப்பட்டன. இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் சந்தானி கிரிந்தே தெரிவித்தார்.

அவர் கடந்த இரண்டு பத்தாண்டு காலமாக பாராளுமன்ற நிக

24ஆம் பக்கம் பார்க்க....

## பெற்றோல், டீசல் ஐந்து ரூபாயால் குறைவடைகிறது

(கொழும்பு)

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு முதல் தலா 5 ரூபாயால் குறைக்கப்படுகிறது என்று சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்தார்.

பெற்றோல் 92 மற்றும் 95 ஒக்ரைன், டீசல் சுப்பர் மற்றும் ஓட்டோ

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் 'கஜா' சூறாவளியால் பலத்த காற்றுடன் கடும் மழை

### கரையோர மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

கஜா சூறாவளியால் நேற்று இரவு குடாநாட்டில் மழையுடன் கூடிய காற்றின் வேகம் அதிகரித்து காணப்பட்டதுடன், பல்வேறு பகுதிகளில் சேதங்கள் ஏற்பட்டுள்ளது.

மத்திய வங்காள விரிகுடா கடற்பரப்புகளில் ஏற்பட்ட கஜா என்ற சூறாவளியானது நேற்று இலங்கையின் வடக்கு கரை பகுதியால் தென் தமிழ்நாடு கரையை சென்றடைந்தது.

இந்த சூறாவளியின் தாக்கம் காரணமாக வட்க்கில் நேற்று இரவு 9 மணிக்கு பின்னர் காற்றின்

23ஆம் பக்கம் பார்க்க....

நாட்டின் குழப்பத்திற்கு

## இரு நாட்களில் தீர்வு: ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை இன்னும் இரண்டு நாட்களில் முடிவுக்குக் கொண்டுவரப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கட்சித் தலைவர்களுடன் நேற்று

23ஆம் பக்கம் பார்க்க....

## பாராளுமன்றில் கத்தியுடன் ஐ.தே.க எம்.பி தேவப்பெரும

(கொழும்பு)



நேற்றைய பாராளுமன்ற அமர்வில் ஏற்பட்ட குழப்பத்தின் போது, ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித தேவப்பெரும கையில் கத்தியுடன் முரண்பட்டுக்கொள்கின்ற ஒளிப்படங்கள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

24ஆம் பக்கம் பார்க்க....

# காணாமல்போன குடும்பஸ்தர் முல்லையில் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் காணாமல்போயிருந்த குடும்பஸ்தர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 13.11.2018 அன்று கொக்குத்தொடுவாய் மத்தி நாயடித்த முறிப்பு வயல்வெளியில் வயலுக்கு காவலுக்குச் சென்ற விவசாயியான 42 அகவையுடைய கனகையா உதயகுமார் வயல் காவலுக்காக சென்று 14.11.2018 இரவு வரை வீடு திரும்பாத நிலையில் உறவினர்கள் தேடியுள்ளதுடன் அவரது உறவினர்கள் முல்லைத்தீவு வெலிஓயா பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடும் செய்துள்ளார்கள்.

இதனையடுத்து பிரதேச மக்கள், இளைஞர்கள் இணைந்து தேடியும் அவரை காணாத நிலையில் படையினரின் உதவியுடன் பிரதேச இளைஞர்களும் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது உயிரிழந்துள்ள நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-315)


## காயத்திரி திருமாங்கல்ய சேவை

திருமணம் பொருத்தம் பார்த்தல், நிச்சயித்தல், குறிப்பு எழுதுதல் போன்ற சேவைகளை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றோம். எமது சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-076 835 1932,
021 223 2222
உரும்பிராய்.
(6467)

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப்போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932,
021 223 2222
உரும்பிராய்.
(6467)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## பட்டச்சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களாக பதிவினை மேற்கொண்டு 29.05.2018ஆம் திகதிய பட்டச்சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பங்குபற்றிய பட்டதாரிகள் மற்றும் அதற்கு முற்பட்ட ஆண்டுகளில் பட்டங்களை பெற்றுக் கொண்ட பட்டதாரிகளில் இதுவரை பட்டச்சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளாதிருக்கும் சகல பட்டதாரிகளும் அவர்களுக்குரிய பட்டச்சான்றிதழ்களை 30.11.2018ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் மாணவர் பதிவேட்டு புத்தகத்துடன், நேரடியாக சமுகமளித்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
14.11.2018 (C-4419)

†

# மரண அறிவித்தல்

தோற்றம்
18
-
08
-
1927



மறைவு
15
-
11
-
2018

திருமதி
## சூசைப்பிள்ளை மேரிப்பிள்ளை (மலர்)

*மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கிளாலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சூசைப்பிள்ளை மேரிப்பிள்ளை (மலர்) நேற்று (15.11.2018) வியாழக்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - பிளோமினா தம்பதியரின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசமலரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மகேந்திரன், தவம் மற்றும் ராணி, றதி, குநேந்திரன், ரவீந்திரன், வவா ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலா, காலஞ்சென்ற ஜோச், குணம் மற்றும் மரீனா, ராஜேஸ்வரி, நீக்கிலஸ் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.11.2018) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் கிளாலி கண்மணி மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் கிளாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

(6468)

கிளாலி,
எழுதுமட்டுவாழ்.

தகவல்:- பிள்ளைகள்
077 323 9654

# மு/முல்லைத்தீவு றோ.க.த.மகளிர் பாடசாலை

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை சாதனையாளர்கள் - 2018

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி மேரி சதுர்சி
தமிழ்ச்செல்வன்
புள்ளி 182



செல்வி பிறைளணி
ஜதீஸ்வரரூபன்
புள்ளி 186



செல்வன் திருமால்
ரிஷாந்த்
புள்ளி 179



செல்வன்
பெலிக்மதனராசா
மேரீசன்
புள்ளி 194
மாவட்ட நிலை - 02



செல்வி சாயிரா
முகுந்தன்
புள்ளி 186



செல்வன் ரஜனிகாந்தன்
கபிந்தன்
புள்ளி 186



செல்வன்
கில்மன்சாள்ஸ்
ஹார்டின்சியான்
புள்ளி 178



செல்வி அருணி விஜயரட்ணம்
புள்ளி 164



செல்வி விதுர்சிகா
வினோத்
புள்ளி 183



எமது பாடசாலையில் மாவட்டத்தில் சாதனை படைத்த மாணவனுக்கும் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் 96% சித்தியினை பெற்றுத்தந்த அனைத்து மாணவர்களுக்கும் அவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



செல்வன் ஸ்ரீமோகன்
அபிசன்
புள்ளி 176




செல்வன் குசலகுமார்
ஜதுர்சிகன்
புள்ளி 177

பெற்றோர் - திரு.மிக்கேல்பிள்ளை பெலிக்ஸ் மதனராசா
அளம்பில், முல்லைத்தீவு.

(C-4417)

# போர்க்களமானது பாராளுமன்றம்!









பாராளுமன்றில் நேற்றுக் காலை சபை நடவடிக்கைகள் ஆரம்பமானபோது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விசேட உரையொன்றை ஆற்றியிருந்தார்.

அந்த உரையில் நேற்று முன்தினம் அவர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான வாக்களிப்பு சபாநாயகரால் குரல் மூலமே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதனால் அவ்வாறான ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை பிரதமர் மீதும் அரசாங்கத்தின் மீதும் கொண்டு வருவதாக இருந்தால் அதனை வாக்களிப்பின் பெயர் குறிப்பிட்டுமேற்கொள்ளா வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிடும் போது,

பாராளுமன்றின் சபை நடவடிக்கையின் போது மகிந்த ராஜபக்ஷ நடத்திய விசேட உரையின் பின்னர் லக்ஷ்மன் கிரியெல்ல மகிந்தவின் உரையில் கூறப்பட்ட விடயங்கள் உண்மையல்ல என்று கூறி இன்றும் மீண்டுமொரு வாய்மூல நம்பிக்கையில்லா வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என சபாநாயகரிடம் கேட்டுக் கொண்டார். இதனைத்தொடர்ந்தே சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினைச் சேர்ந்தவர்கள் சபாநாயகருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு சபாநாயகரின் ஆசனத்தை நோக்கி நகர்ந்தனர். அவ்வேளை சபாநாயகரை பாதுகாப்பதற்காக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்தவர்களும் படைக்கல சேவியர்களும் அவ்விடத்தில் குவிந்தனர்.

இதன்போது இரு குழுவினருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியது. இரத்தமேற்படும் வகையில் மோதல் இடம்பெற்றுள்ளது. பாராளுமன்றில்குழப்ப நிலையேற்பட்டதால் சபாநாயகர்வெளியேறினார் (இ-7)

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடு வெட்கக் கேடானது

### சபாநாயகர் கரு ஜெயசூரிய காட்டம்



(கொழும்பு)

மக்களின் பெறுமதிமிக்க வாக்குகளை பெற்று நாடாளுனன்றத்திற்கு வந்துள்ள உறுப்பினர்கள் செயற்படும் விதமானது மிகவும் வெட்கக் கேடானதென சபாநாயகர் கரு ஜெயசூரிய கடுமையாக சாடியுள்ளார்.

நேற்று நாடாளுமன்ற அமர்வில் பிரதமர் மகிந்த உரையாற்றிய சந்தர்ப்பத்தில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதன்போது பிரதமர் மகிந்தவிற்கு எதிரான நம் பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பை பெயர் அடிப்படையில் நடத்துமாறு லக்ஷ்மன் கிரியெல்ல கோரி னார்.

இதனைத் தொடர்ந்து சபா நாயகர் ஆசனத்தை சூழ்ந்து இரு தரப்பினருக்கும் இடையில் கடும் அமளி துமளி ஏற்பட்டது.

இந்நிலையில், இச் செயற்பாடு மிகவும் அருவருக்கத்தக்கதும் வெட்கக் கேடானதுமென சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அத்தோடு நாடாளுமன்ற விடயங்களில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு என்றும் அதற்கு அனுமதி வழங்குமாறும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இரு தரப்பினருக் கும் இடையில் தொடர்ந்தும் கடும் அமளி துமளி ஏற்பட்டது. (இ-7)

## சபாநாயகரை நோக்கி தூக்கியெறியப்பட்ட குப்பைக் கூடை, தண்ணீர் போத்தல்கள்!



(கொழும்பு)

பாராளுமன்றில் நேற்று ஏற்பட்ட பதற்ற சூழ்நிலையையடுத்து சபாநாயகர் பாராளுமன்றை ஒத்தி வைக்காமலேயே தனது நாற்காலியை விட்டு எழுந்து சென்றுள்ளார்.

பாராளுமன்ற சபை நடவடிக்கைகள் நேற்று முற்பகல் 10 மணியளவில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் ஆரம்பமானது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உரை யாற்றிய பின்னர் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. உரை யாற்ற ஆரம்பித்த வேளை சபை யில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

இதனையடுத்து இரு தரப்பினரும் கடுமையான வாக்குவாதங்களில் ஈடுபட்டனர். இரண்டு தரப்பினரும் சபாமண்டபத்துக்கு நடுவில் வந்து வாக்கு வாதங்களில் ஈடுபட்டதுடன் ஒருவர் மீது ஒருவர் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மேலும் மகிந்த அணியின் எம்.பி. ஒருவர் சபாநாயகரின் ஒலிவாங்கியை சேதப்படுத்த முற்பட்ட போது அவரின் கையில் காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்தோடியது.

மேலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அணியினர் -சபாநாயகர் அமர்ந்திருந்த ஆசனத்தை சுற்றி வளைத்து அச்சுறுத்தல்களை மேற்கொண்டனர். மேலும் சிலர் குப்பைக்கூடைகளைகொண்டு தாக்க முயற்சித்தனர்.

இதனை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது ஆசனத்தில் அமர்ந்து அமைதியாக சபையில் நடந்த குழப்பங்களை அவதானித்துக் கொண்டிருந்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எதிரணியின் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட சில உறுப்பினர்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்தார். மோதல்கள் உச்சமடைந்த போது மகிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சபையில் இருந்து வெளியேறினர்.

பாராளுமன்றில் ஏற்பட்ட கைகலப்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் குப்பைக் கூடை களை சபாநாயகரை நோக்கி தூக்கியெறிந்ததை யடுத்தே சபாநாயகர் எந்த வித அறிவிப்பையும் விடுக்காது அக்ராசனத்தில் இருந்து எழுந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பெரும்பான்மை இல்லாததால் நாடாளுமன்றத்தில் குழப்பம் சுனில் எம்.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)



பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அவரது குழுவினர் அவர்களது பெரும் பான்மையை நிரூபிக்க முடியாத காரணத்தால், பாரிய இடையூறை நேற்று பாராளுமன்றத்தில் ஏற்படுத்தினரென்று, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபாநாயகரை அவரது அக்ராசனத்திலிருந்து அப்புறப்படுத்தும் வகையில் மிகவும் மோசமான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இவர்களது நடவடிக்கையின் பிரதிபலனாகவே மகிந்தவின் உரை குறித்து வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முடியாமல் போனது.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சம்பவங்களை முழு நாட்டு மக்களும், கட்சி, இனம், நிறம், மொழி பேத மின்றி நிராகரிக்க வேண் டிய நிலையே நாடாளுமன் றத்தில் ஏற்பட்டது.

இங்கு இடம்பெற்ற பிரச்சினையானது வாகனங்கள், சொத்துக்கள், அரச அதிகாரிகளை தமக்கு பயன்படுத்துவதற்கான அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளத்தானே நாடாளுமன்றம் முடிவு செய்தால் வாக்கெடுப்புக்குச் செல்ல அதனை தீர்மானிக்கும் பொறுப்பு நாடாளுமன்றத்தில் உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்கள் தமது விருப்பத்தைப் தெரிவிப்பதன் மூலம் தீர்மானிக்கலாம். எனவே தேர்தல் வேண்டுமெனில் நாடாளுமன்றத்தில் யோசனையை சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த யோசனைக்கு நாமும் ஆதரவளிப்போம்.

ஆனால் உரைக்கு கூட வாக்கெடுப்பை நடத்த விடாதவர்கள் தேர்தலுக்கு செல்வதற்கான வாக்கெடுப்பை நடத்த விடுவார்களா என கேள்வி எழுப்பினார். (இ-7)

# ‘ஷார்ப் லுக்கரு’ ரோஷன்

## அரைச்சதம் விளாசி அசத்தல் இலங்கை அணி முன்னிலை



அபராமாக துடுப்பெடுத்தாடி இலங்கையை முன்னிலை பெற வைத்த ரோஷன் சில்வாவின் அதிரடிகளில் ஒன்று

இங்கிலாந்துக்கு எதிரான பல்லேகல டெஸ்டில் ரோஷன் சில்வா அரைச்சதம் கடந்து கைகொடுக்க, இலங்கை அணி முன்னிலை பெற்றது.

இலங்கை வந்துள்ள இங்கிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

காலியில் நடந்த முதல் டெஸ்டில் இங்கிலாந்து அணி வென்ற நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது போட்டி கண்டி பல்லேகலயில் நடக்கிறது.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 290 ஓட்டங்கள் எடுத்தது. நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர நிறைவில், முதல இன்னிங்சுக்காக துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி ஒரு விக்கெட்டை இழந்து 26 ஓட்டங்களை எடுத்திருந் தது.

கருணாரத்ன (19), மலிந்த (1) ஆட்டமிழக்காமல் இருந்த னர்.

**ரோஷன் அரைச்சதம்**

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது. மலிந்த (4), குசால் மெண்டிஸ் (1) ஒற்றை இலக்கில் திரும்பினர். கருணாரத்ன (63), தனஞ்செய (59) அரைச்சதம் கடந்தனர். ரஷித் ‘சுழலில்’ மத்யூஸ் (20) அவுட்டானார். ரோஷன் சில்வா (85) அரைச்சதம் எட்டினார். மற்றையவர்கள் ஏமாற்ற.

இலங்கை அணி முதல் இன்னிங்சில் 336 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.


இதன்மூலம் 51 ஓட்டங்களால் முன்னிலை பெற்றபோதும், 5 ஓட்டங்கள் ‘பெனால்டி’ கொடுக்கப்பட்டதால், 46 ஓட்டங்கள் மட்டும் முன்னிலையாக கணக்கிடப்பட்டது.

தொடர்ந்து தமது 2ஆவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணி ஒரு ஓவரை எதிர்கொண்டு ஓட்டம் எதுவும் எடுக்காத நிலையில், இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

**அபராதம்**

முதல் இன்னிங்சின் 86ஆவது ஓவரின் முதல் பந்தை இங்கிலாந்தின் லீச் வீசினார். இதை இலங்கையின் ரோஷன் சில்வா அடித்தார். பவுண்டரி எல்லை நோக்கி சென்ற பந்தை, மொயீன் அலி பிடித்தார். இதை கவனித்துக்கொண்டே ஓடிய ரோஷன், ‘கிரீசில்’ துடுப்பை சரியாக வைக்கவில்லை. பின் தனஞ்செயவுடன் இணைந்து இரண்டாவது ஓட்டமும் எடுத்தார். இதைக் கவனித்த நடுவர் எராஸ்மஸ் (தென்னாபிரிக்கா), ரோஷன் வேண்டுமென்றே செயற்பட்டதாக கூறி, இலங்கைக்கு 5 ஓட்டங்கள் அபராதம் விதித்தார். இது, இங்கிலாந்து அணியின் முதல் இன்னிங்சில் உதிரி கணக்கில் சேர்க்கப்பட்டது.

# தொடர் சமனிலை




வெற்றிக்கிண்ணத்துடன் பங்களாதேஷ் அணித் தலைவர் (இடது) சிம்பாப்வேயின் மககட்சா

மெகடி ஹசன் ‘சுழல்’ ஜாலம் காட்ட பங்களாதேஷ் அணி 218 ஓட்டங்கள் வித்தியாசத்தல் சிம்பாப்வே அணியை வீழ்த்தியதுடன் தொடரையும் 1:1 என்ற கணக்கில் சமன் செய்தது. சிம்பாப்வேயின் பிரண்டன் டெய்லரின் சதம் வீணானது.

பங்களாதேசுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணி அங்கு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.

முதல் டெஸ்டில் சிம்பாப்வே வென்றது. இரண்டாவது போட்டி டாக்காவில் நடந்தது. முதல் இன்னிங்சில் பங்களாதேஷ் 522/7 (‘டிக்ளேர்’), சிம்பாப்வே 304 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்சில் பங்களாதேஷ் 224/6 (‘டிக்ளேர்’) ஓட்டங்கள் எடுத்தது.

443 ஓட்டங்கள் என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த சிம்பாப்வே, நேற்று முன்தினம் 4ஆம் நாள் ஆட்டநேர நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களை எடுத்திருந்தது. பிரண்டன் ரெய்லர் (4), சேன் வில்லியம்ஸ் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**மெகடி அபாரம்**

நேற்ற ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. முஸ்டபிசுர் பந்தில் சீன் வில்லியம்ஸ் (13) ஆட்டமிழந்தார். சிக்கந்தர் ராஜா 12 ஓட்டங்களில் திரும்பினார். மெகடி ‘சுழலில்’ பீற்றர் மூர் (13), டிரிபானோ (0), மவுடா (0) சிக்கினர். பிரண்டன் டெய்லர் மட்டும் நம்பிக்கையுடன் விளையாடினார். மற்றவர்கள் ஏமாற்றியபோதும், பிரண்டன் இப்போட்டியில் இரண்டாவது முறையாக சதம் கடந்தார். ஜார்விசை (1) வெளியேற்றிய மெகடி 5ஆவது விக்கெட்டை சாய்த்தார்.

சிம்பாப்வே அணி இரண்டாவது இன்னிங்சில் 224 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.


பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் அதிகபட்சமாக மெகடி ஹசன் 38 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதன் மூலம், இரண்டு போட்டிகள் கொண்ட தொடர் 1:1 என்ற கணக்கில் சமனிலையானது.

போட்டியின் ஆட்டநாயகனாக பங்களாதேஷின் ரஹீமும், போட்டித்தொடரின் நாயகனாக பங்களாதேஷின் தைஜுல் இஸ்லாமும் தெரிவாகினர்.




ஆட்டநாயகன் விருதுடன் ரஹீம்



கத்தியுடன் சபையில் பாலித

சண்டையை இருந்தபடி வேடிக்கை பார்த்த ரணில்

சபாநாயகருக்கு பாதுகாப்பு வழங்கும் ஐ.தே.கவுடன் செல்வம் அடைக்கலநாதன்

சண்டையில் கீழே விழுந்த உறுப்பினர்

அமைதியாக இருக்கும் பிரதமர் மகிந்த

# ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூரிய ஆயுதங்களை எடுத்து வந்தனர்

## அமைச்சர் தயாசிறி பகிரங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

பாராளுமன்றத்திற்குள் ஏற்பட்ட அமைதியற்ற நிலைமைக்கு சபாநாயகரே பொறுப்புக்கூற வேண்டும்என அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் வைத்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் தனது ஆசனத்தில் அமர்ந்து இருந்த காரணத்தினால் தான் இவ்வாறு அமைதியற்ற நிலைமை ஏற்பட்டதாக தயாசிறி தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்தி வைத்துவிட்டு தனது ஆசனத்தில் இருந்து எழுந்து சென்றிருந்தால் இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருக்காது என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கூரிய ஆயுதங்களுடன் பாராளுமன்றத்திற்குள் வந்திருந்ததாகவும் தயாசிறி ஜெயசூரிய பகிரங்கமாக குற்றம் சாட்டினார். (இ-7)

### கத்தியுடன் வந்த எம்.பிக்கள்

## சபாநாயகர் கேலித்தனமாக நடந்து கொள்கிறார்-கம்மன்பில



(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜெயசூரிய கேலித்தனமாக நடந்து கொள்கிறாரென அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் போலவே நேற்றும் சபாநாயகரின் நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆளுங் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் காயமடைந்துள்ளதாகவும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருவர் கத்தியுடன் சபைக்கு வந்துள்ளதாகத் தகவல் கிடைத்ததாகவும் உதய கம்மன்பில தெரிவித்தார். (இ-7)

## பெருமளவு வெடிமருந்துகள் விசேட அதிரடிப் படையால் மீட்பு

(யாழ்ப்பாணம் )

யாழ். குருநகர் இறங்குதுறை பகுதியில் ரி.என்.ரி மற்றும் சி4 வகை வெடிமருந்துகள் நேற்று விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளது.


விசேட அதிரடிப்படைக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு குருநகர் இறங்குதுறைமுகத்தில் தேடுதல் நடத்திய போது அப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த வலைக்குள் இருந்து ரி.என்.ரி. மற்றும் சி4 வகை 2 கிலோ 196 கிராம் நிறையுடைய வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடிமருந்துகள் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த விடயம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன் மீட்கப்பட்ட வெடி மருந்தினை யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ். நீதிமன்றில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-9-101)

## இலங்கையின் உள்விவகாரத்தில் இந்தியா தலையிட முடியாது

### தமிழக அமைச்சர் ஜெயக்குமார் விளக்கம்



(சென்னை)

இலங்கையில் தற்போது அரசியல் பிரச்சினை சூடுபிடித்துள்ள நிலையில், இலங்கையின் உள்விவகாரத்தில் இந்தியா தலையிட முடியாதென தமிழ்நாடு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தமிழக மீன்வளத்துறை அமைச்சர் டி.ஜெயக்குமார் இதனைத் தெரிவித்துள்ளதாக டெக்கான் குரோனிக்கல் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஒருநாட்டின் உள்ளக விவகாரங்களில் மற்றொரு நாடு எப்படியும் தலையிட முடியாதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், சிறுபான்மை மக்களின் நலன்களை கருத்திற்கொண்டு, அம்மக்கள் மீதான கரிசனை தொடர்ந்தும் நீடிக்குமென அமைச்சர் ஜெயக்குமார் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமைக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இது குறித்து உலக நாடுகள் பல உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

இதேவேளை, இலங்கை விடயத்தில் சர்வதேசத்தின் தலையீடு அவசியமென கடந்த காலங்களில் இந்தியா வலியுறுத்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சபாநாயகரை தாக்க முயற்சி நோர்வே கடும் கண்டனம்



(கொழும்பு)

சபாநாயகரை தாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது ஜனநாயகத்தின் கொள்கைகளுக்கு முரணான விடயம் என நோர்வே தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் தோர்ப் ஜோர்ன் கவுஸ்டெசெதர் இதனை தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள் ளார்.

ஜனநாயகம்என்பது ஸ்தாபனங்களுக்கு மதிப்பளிப்பது என்பது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காணப்படும் அரசியல் சூழ்நிலை ஆழ்ந்த கவலையளிக்கின்றது எனத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்று அமளிதுமளி நிலவிய வேளை பல வெளிநாட்டு தூதுவர்கள் பார்வையாளர்கள் களரியில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** எதிர்பாராத தன வரவுகள் இல்லம் வந்து சேரலாம், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**இடபம்:** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பிறர் உதவியுண்டு, வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**மிதுனம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம்.

**கும்பம்:** புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம் ஆயிலியம்

செவ், சந் | ராகு | கேது | சனி | குரு | சூரி, புத, சுக்

16.11.2018

ஐப்பசி 30, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு

அட்டமி முற்பகல் 8.38 மணிவரை

அவிட்டம் முற்பகல் 11.14 மணிவரை

சுபநேரம் 6.07-7.37 மணிவரை

இராகுகாலம் 10.37-12.07 மணிவரை

ஐப்பசி வெள்ளி

அட்டமி-நவமி

வளவன்

**கடகம்:** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, எடுத்த காரியங்களில் நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டிய நாள்.

**மகரம்:** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**சிம்மம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு, கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** வியாபார விருத்தி ஏற்படும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்ப்புக்கள் நிறைவேறலாம், தாய்வழி உறவில் ஆதரவு கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

# மகரஜோதி பெருவிழா

(யாழ்ப்பாணம)

நயினாதீவு அருள்மிகு சபரீச ஐப்பன் மண்டல பூஜை மகரஜோதி பெருவிழா மண்டலபூஜை நாளை 17 ஆம் திகதி ஆரம்பமாகி 14.01.2019 இல் நிறைவுபெறும்.

நாளைக் காலை 8 மணிக்கு ஐயப்ப விரத சுவாமிகள் மாலை அணியும் நிகழ்வு நடைபெறும். தினமும் பிற்பகல் 3 மணிக்கு விசேட அபிஷேகங்கள், தீபாராதனைகள், பஜனைகள் சிறப்பாக நடைபெறும். 26.12.2018 சுவாமிமார்கள் இருமுடி கட்டும் நிகழ்வும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அரிகர புத்திர ஐயப்பன் ஆலயத்தில் நடைபெறும். 27.12.2018 மண்டல பூஜை தினம் அன்று இருமுடி சுமந்து நடைபவனியாக ஐயப்பன் ஆலயம் சென்று ஐயப்பனுக்கு நெய் அபிஷேகம் நடைபெறும்.

இருமுடி கட்டும் ஐயப்பன் சுவாமிமார்கள் காலை 8 மணிக்கு நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வாசிப்புமாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் சிறுவர் பகுதியால் கடந்த மாதம் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்:

வர்ணம் தீட்டுதல் - முன்பள்ளி. 1ஆம் ஆண்டு- சு.மகரிஷா-1ஆம் இடம், நி.தமண்யா-2ஆம் இடம், லோ.கபிசன்-3ஆம் இடம், ஆறுதல் பரிசுகள் த.மேரிஷா, ஷ.கெவின், றொ.ஆகீஸ், எம்.எச்.எம்.உமர், றொ.அரவிந், சி.டாறியோ, றெ.சஜோன் 90 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்.

வர்ணம் தீட்டுதல்-2ஆம் ஆண்டு, 3 ஆம் ஆண்டு- என்.திவக்சி- 1ஆம் இடம், அ.கேசிகன்- 2ஆம் இடம், ஜெ.அட்சரா-3ஆம் இடம்.

சித்திரம் வரைதல்-4ஆம் ஆண்டு, 5 ஆம் ஆண்டு- த.யாகுலன் 1ஆம் இடம், எம்.என்.பி.நுஹா-2ஆம் இடம், த.லாரணி-3ஆம் இடம்.

பேச்சு-6ஆம் ஆண்டு, 7ஆம் ஆண்டு- பி.சாயகி- 1ஆம் இடம், ற.அபிநயா- 2ஆம் இடம், ஜெ.ஆருத்ரா, ஜ.கார்த்திகன்- 3ஆம் இடம்.

கட்டுரை-8ஆம் ஆண்டு, 9 ஆம் ஆண்டு-எச்.ஹர்ணி- 2ஆம் இடம், பி.ஜஸ்வினி - 2ஆம் இடம், உ.அஸ்வினி- 3 ஆம் இடம். (இ-17)

## பாராட்டுதலும் பரிசில் வழங்குதலும்

(யாழ்ப்பணம்)

யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை சிறகடிக்கும் சிட்டுக்கள் -2018 பாராட்டுதலும் பரிசில் வழங்குதலும் நிகழ்வு நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் மாலதி சுப்பிரமணியம் அரங்கில் அதிபர் பே.தனபாலசிங்கம் தலைலைமயில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை ஆசிரியர் திருமதி கிருபாஹரி இளங்கோவன். சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) ப.சசிகுமார், சட்டத்தரணி அட்சய சுரபி ஞானலோஜினி சிவஞானம் அகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்



உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் கரவெட்டி கன்பொல்லை மக்கள் ஒன்றியத்தின் ஊடாக பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அண்மையில் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. (இ-60)


## பாடசாலை பரிசுத்தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை பரிசுத்தினம் இன்று 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மாலதி சுப்பிரமணியம் அரங்கில் அதிபர் பே.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக யாழ்.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) சி.மாணிக்கராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# வீதியின் குறுக்கே வாய்க்கால் இடர்களைச் சந்திக்கும் பயணிகள்



(குருநகர்)

குருநகர் மத்திய கிழக்கு வீதியில் அமைந்துள்ள கழிவுநீர் வாய்க்காலை பிரதான கழிவுநீர் வாய்க்காலுடன் இணைப்பதற்காக குருநகர் தண்ணீர்த்தாங்கி வீதியின் குறுக்கே இரண்டு வாய்க்கால்கள் வெட்டப்பட்டன.

வெட்டப்பட்ட இவ் வாய்க்கால் வேலைகள் மூன்று வாரங்களாகியும் நிறைவடையாமையினால் அவ் வீதியால் பயணிக்கும் மாணவர்கள், வயோதிபர்கள், மற்றும் வாகனங்களில் செல்வோர் பெரும் இடர்களைச் சந்தித்து வருகின்றனர்.

எனவே இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (இ-5-106)

# துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் அமைக்க வாசகர்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வரணி பொது நூலகமானது பிரதேச மக்கள் அதிகம் பயன்படுத்தும் ஒரு நூலகமாகும்.

இந் நூலகத்திற்கு இது வரைக்கும் துவிச்சக்கர வண்டித் தரிப்படம் ஒன்று அமைக்கப்படாமை பெரும் குறைபாடாகவுள்ளது. நூலகத்திற்கு வரும் வாசகர்கள் மற்றும் மாணவர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை வெயிலிலேயே நிறுத்த வேண்டியுள்ளது. இதனால் அவர்களது துவிச்சக்கர வண்டி சில்லுகளின் காற்று போவதால்உருட்டிக் கொண்டு நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அது மட் டுமன்றி மழை காலங்களிலும் வாசகர்களின் துவிச்சக்கர வண்டிகள் மோட்டார் சைக்கிள் போன்றவற்றை மழையிலேயே நிறுத்த வேண்டியுள்ளது. இதனால் அவை பழுதாகின்ற சந்தர்ப்பமும் ஏற்படுகின்றது. ஆகவே வாசகர்கள் மற்றும் மாணவர்களின். நலனைக் கருத்தில் கொண்டு துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் அமைப்பதற்கு பிரதேச சபையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாசகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)




# யாழில் 50 வீத மானியத்தில் உருளைக்கிழங்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையிலான உருளைக்கிழங்கு விநியோக நடவடிக்கை ஆரம்பிக்கப் படவுள்ளதாக யாழ்.மாவட்ட கமக்கார அமைப்பு அதிகாரசபை தலைவர் என். தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

கமக்கார அமைப்புக்களில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் உருளைக்கிழங்கு விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இம்முறை புதிதாக பதிவு செய்யப்பட்ட விவாசாயிகளுக்கு இரண்டு அந்தரும் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு மூன்று அந்தரும் 50 வீத மானிய அடிப்படையில்வழங்கப்படவுள்ளது.

இதன்மூலம் உருளைக்கிழங்கு செய்கையில் இம்முறையும் விவசாயிகள் அதிக நன்மை அடையவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# கலாசார விழா பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச கலாசார விழா இன்று 16.11.2018 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் நடத்தப்படவிருந்தது. இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக (கஜா புயல்) பிற்போடப்பட்டுள்ளது என பிரதேச செயலாளர் பொ.தயானந்தன் அறிவித்துள்ளார். (இ)



யாழ்.நீரிழிவுக்கழகத்தினால் யாழ்.மத்திய சந்தையில் நீரிழிவு நோயாளரை இனம் காணும் பரிசோதனை மருத்துவ முகாமின் மூன்றாவது தினத்தை யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி ஆரம்பித்து வைப்பதையும் வைத்திய கலாநிதி சிவன்சுதன் நீரிழிவு பரிசோதனை மேற்கொள்வதையும் படங்களில் காணலாம்.



மறைந்த முன்னாள் அதிபர் ஆ.சி.நடராசா நினைவாக உரும்பிராயில் நடத்தப்பட்டு வரும் ASN ஆங்கில மொழிக்கல்வி நிறுவன பரிசளிப்பு விழா கடந்த திங்கட்கிழமை உரும்பிராயில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், கல்வியியலாளர்களும் கலந்துகொண்டனர். இந் நிகழ்வில் கல்வியிலும், இணைப்பாடவிதானங்களிலும் திறமை காட்டிய மாணவர்கள் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். விருந்தினர்களுடன் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# போதனா வைத்தியசாலை-யாழ்ப்பாணம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல்- -2019

யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2019 ஆம் ஆண்டிற்குப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத் திற்கமைய தயாரித்து பின்வரும் வழங்கல்கள் / சேவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1000.00 ஐ எமது அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் பெயருக்கு பெறப்பட்ட பிரதான அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் காசாக்கக் கூடிய காசுக்கட்டளையை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல் - 2019" எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2018.12.19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம்.

| உருப்படி இல | பொதுபொருட்கள் |
|---|---|
| A – 01 | அலுவலக காகிதாதிகள், எழுது பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A – 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைவர் போன்றவை) |
| A – 03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், போட்டோபிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதி பண்ணும் இயந்திரங்கள் (Duplo),CCTV கமராக்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் என்பன. |
| A – 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A – 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள் நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A – 06 | சகல விதமான வீட்டுப்பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக், கேத்தல், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் போன்றவை) |
| A – 07 | தும்பு மெத்தை, இறப்பர் மெத்தை , மெக்கின்ரோஸ், எலாஸ்ரிக், நைலோன் நூல் மற்றும் பஞ்சினாலான தலையணைகள் போன்றவை. |
| A – 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள், மணல், கல், தீராந்தி, சலாகை போன்றவை. |
| A – 09. | மின்சாரப் பொருட்கள்,அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும். |
| A – 10 | புற்பாய், தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A – 11 | எல்லா விதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணி துவைக்கும் தூள், பார் சவர்க்காரம் சுத்தப்படுத்துவதற்கான திரவ வகைகள், சவர்க்காரத்தூள், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A – 12 | டயர், டியூப், பற்றிகள் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| A – 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள், எல்லாவிதமான பாதணிகள். |
| A – 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள், தொலைக்காட்சிப்பெட்டிகள், DVD player மற்றும் அதன் உதிரிப்பாகங்களும். |
| A – 15 | சகல வகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன், பைகள், கழிவகற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை. |
| A – 16 | இறப்பர் முத்திரை வகைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை, தினமுத்திரைகள் தயாரித்தல். |
| A – 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பானங்கள். |
| A - 18 | LP வாயு மற்றும் வாயுரெகுலேட்டர், காஸ் பனர், காஸ் குழாய். |
| A - 19 | சத்திரசிகிச்சைக்கு தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர், தாதி, சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை, கட்டில் விரிப்பு, தலையணை உறை, GS Towel) |
| A – 20 | அலுவலக அடையாள அட்டை மற்றும் பெயர் பலகை தயாரித்தல். |
| A – 21 | மருந்துகள் இடும் உறை/ Xகதிர் அட்டை இடும் உறை மற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை. |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| B- 01 | சத்திரசிகிச்சை, மருத்துவ உபகரணங்கள் போன்றவை. |
| B- 02 | ஆய்வுகூட உபகரணங்கள். |
| B- 03 | சத்திரசிகிச்சை, மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப்பொருட்கள் (biopsy needles, catheter, Distill water, surgical spirit, & other such things etc) |
| B- 04 | பதிவு செய்யும் சுருள்கள் [Recording Paper] (ECG, ETT, CTG, EEG recording paper & other such things) |
| B- 05 | சத்திரசிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திரசிகிச்சைத் துணையுறுப்புகள் / X கதிர் போன்றவை. |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C – 01 | உருக்கு மற்றும் மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C – 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, தொலைகாட்சிப் பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C – 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும், மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C – 04 | அலுவலக உபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம், புகைப்பட பிரதி இயந்திரம், Fax இயந்திரம்) |
| C – 05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C – 06 | சலவை சேவைகள். |
| C – 07 | காற்றுக்குளிராக்கி பராமரித்தல் - Air Conditioner Maintenance |
| C – 08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C – 09 | வாயு அடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C – 10 | வீட்டு உபயோகப் பொருட்கள் திருத்துதல், பொலிசிங் செய்தல், கதிரை பின்னுதல் |
| C – 11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C - 12 | தையல் வேலைகள். |

| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D – 01 | சகலவிதமான வாகனங்கள் திருத்துதல், வாகன மின்சார, குளிரூட்டி திருத்த வேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D – 02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E – 01 | கட்டிட நிர்மாணம், கட்டிட புனரமைப்பு, கட்டிடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமானப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E – 02 | அலுமினிய நிர்மாண வேலைகள். |
| E - 03 | தொலைபேசி இணைப்பு மற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை. |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F-01 | (கண்ணாடி, பிளாஸ்ரிக் போத்தல், அலுமினியப் பாத்திரம், X-கதிர் அட்டை, X-கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகலவிதமான பொருட்கள் அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

நிபந்தனைகள்:

01. வழங்கல்கள், சேவைகள் 2019 ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.

02. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளி மூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.

03. பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.

04. பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ஆகக் குறைந்தது ஒருமாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.

05. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.

06. அனைத்து வழங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

07. வழங்குநர்களைப் பதிவு செய்யும் போது வியாபாரப் பெயர் பதிவு சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருள் வியாபார நிலையங்களில் இருந்தும் சந்தைப்படுத்தப்படுகின்ற மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராக பதிவு செய்யப்படும்.

08. மேலதிக விபரங்கள் பெறவிரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் - 021 222 3149 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(சி-4418)

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

| | |
|---|---|
| காசுப்பற்றுச்சீட்டு/ காசுக்கட்டளை இல: | |
| திகதி | |
| தொகை | |

வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2019
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

1. நிறுவனத்தின் பெயர் :
2. நிறுவனத்தின் முகவரி :
3. தொலைபேசி இல. :
4. தொலைநகல் இல. :
5. மின்னஞ்சல் முகவரி :
6. வியாபாரப் பதிவுபெயர் :
(வியாபாரப் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
7. VAT: பதிவு இலக்கம் :
8. கடன் வசதி பற்றிய விபரம் (கால எல்லை/தொகை):

| உருப்படி இலக்கம் | வழங்கல்/ சேவை விபரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்/சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிப்பதுடன் ரூபா............க்குரிய பற்றுசீட்டு/காசுக்கட்டளை இத்துடன் இணைத்துள்ளேன்.

.............................. ..............................

விண்ணப்பதாரியின் பெயர் — விண்ணப்பதாரியின் ஒப்பமும் நிறுவன இறப்பர் முத்திரையும்

..............

திகதி

# 72 வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்து வரும் மக்கள் குடிநீர்,தொழில் இன்றி அவதி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பொன்னகர் பகுதியில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட 72 வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்து வரும் மக்கள் குடிநீர் வசதி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் இன்றி பெரும் சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொன்னகர் கிராமத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட 72 வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்து வரும் மக்கள் தமக்கான போதிய வசதிகள் இல்லாது காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளதுடன், இந்தக் குடியிருப்பிலே பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்,மாற்றுத் திறனாளிகளைக்கொண்ட குடும்பங்களே அதிகளவில் வாழ்ந்துவருவதுடன், தொழில் வாய்ப்புக்கள் இன்றி பெரும் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தமக்கு வழங்கப்பட்டிருக்கின்ற காணித் துண்டுகள் சிறிய துண்டுகளாக இருப்பதனால் வாழ்வாதாரத்திற்கான தோட்டச்செய்கைகளைக் கூட மேற்கொள்ளமுடியாது என்றும் தெரிவித்துள்ள இப்பகுதி மக்கள் தமக்கு வழங்கப்பட்டிருக்கின்ற வீடுகள் மிகக்குறுகிய காலத்திற்குள் சேதமடைந்துள்ளதாகவும் கூறியுள்ளார். அதாவது, சுவர்களில் பாரிய வெடிப் புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் கூரைகளும் சேத மடைந்துள்ளன.

இதேவேளை ஏற்கனவே வசித்து வருகின்ற 72 குடும்பங்களை விட இருபது வரையான குடும்பங்கள் காணிகள் இன்றி இந்தக் குடும்பங்களுடன் வாழ்ந்து வருகின்றனர் எனவும் இவர்களுக்கான காணிகளைப் பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# வவுனியாவில் நான்கு பேர் கேரள கஞ்சாவுடன் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களின்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் சென்ற பேருந்தில் நான்கு பேர் ஒரு கிலோ 580 கிராம் கேரள கஞ்சாவுடன் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

வவுனியாவில் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று அதிகாலை வரை இடம்பெற்ற விசேட நடவடிக்கையின்போது தமது உடைமைகளில் மறைத்து வைத்து யாழப்பாணம்-திருகோணமலை, யாழ்ப்பாணம்-வவுனியா, யாழ்ப்பாணம்-கதிர்காமம் சென்ற பேருந்துகளில் சென்றவர்களினால் எடுத்துச் செல்லப்பட்ட சட்டவிரோத கேரளக் கஞ்சாவுடன் திருகோணமலை 38வயது, நெளுக்குளம் 19வயது, பாவற்குளம் 29வயது, அநுராதபுரம் 26வயதுடைய நான்கு சந்தேக நபர்களை கைது செய்துள்ளோம். அவர்களிடமிருந்து ஒருகிலோ 580கிராம் கேரளக் கஞ்சாவினைக் கைப்பற்றியுள்ளதாகவும் அவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-281)

# “இராணுவக் கட்டுப்பாட்டில் காணி இருக்கவில்லை”

கரைச்சிப் பிரதேசத்தில் காணப்படும் நூலகக் காணி எந்த விதத்திலும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கவில்லை என இராணுவத் தலைமையகம் விடுத் துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

கடந்த 3 ஆம் திகதியன்று வலம்புரிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள “இராணுவத்தினால் கிளிநொச்சி கரைச்சி நூலகக்காணி விடுவிப்பு தொடர்பாக அறியத் தருவதாவது,

இராணுவத்தால் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் காணப்படும் நூலகக் காணியானது எவ்விதத்திலும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கையாளப்படவில்லை.

மேலும் இக் காணியரனது இராணுவத்தால் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்படவில்லை என இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ

# சிறுகடற்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்திய இழுவைப்படகுகள் கரைக்கு வெளியேற்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராஞ்சி பகுதியிலுள்ள இலவங்குடா கடற்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இந்திய இழுவைப் படகுகளை கரைக்குக்கொண்டு வந்துள்ளமையால் தொழிலுக்கு சென்றுவரக்கூடியதாக இருப்பதாக கிராஞ்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்தெரிவித்துள்ளது.

மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கடற்பரப்புக்களில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டபோது கைப்பற்றப்பட்ட சுமார் 35இற்கும் மேற்பட்ட இந்திய இழுவைப் படகுகள் நீதிமன்றக்கட்டளைகளுக்கு அமைவாக இதுவரை காலமும் பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சி இலவங்குடா சிறு கடற்பகுதியில் இலங்கை கடற்படையினரால் நிறுத்திவைக்கப்படடிருந்தன.

இதனால் இந்திய இழுவைப்படகுகளில் இருந்து வெளியேறும் எண்ணெய்க்கசிவுகள் மற்றும் படகுகள் நிறுத்திவைத்திருந்தமை காரணமாக சுமார் 59இற்கும் மேற்பட்ட மீனவர்களின்தொழில் பாதிக்கப்பட்டிருந்தது.

குறித்த படகுகளை அகற்றி தொழில் செய்யக்கூடிய சூழலை உருவாக்கித் தருமாறு கடற்றொழிலாளர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தனர். இதேவேளை பூநகரிப்பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து, சிறுகடற்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மேற்படி இந்திய இழுவைப்படகுகள் கடற்கரையோரத்தில் இழுத்து விடப்பட்டுள்ளன.

இவ்வாறு விடப்பட்டுள்ளதனால் குறித்த கடற்பகுதியில் கடற்றொழிலாளர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடியதாக உள்ளது என்றும் கடற்றொழிலாளர்களும் கிளிநொச்சி கிராஞ்சி கடற்தொழிலாளர் சங்க நிர்வாகமும் தெரிவித்துள்ளது. (2-315)

# புகையிரதத்தில் குதித்து இளைஞன் தற்கொலை

(கொழும்பு)

பெரதெனியா, நானுஓயா புகையிரத கடவைக்கு அருகில் புகையிரதத்தில் குதித்து இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து கண்டி நோக்கி பயணித்த கடுகதி புகையிரதத்திலேயே குறித்த நபர் குதித்த தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிலிமதலாவ, இம்புல்மல்கம பகுதியை சேர்ந்த சானக நிரோஷன் (வயது-21) என்ற இளைஞரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். சடலம் பெரதெனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (2-7)



சாவகச்சேரி பிரதேசசபை கச்சாய் பொது நூலகத்தினரின் ஏற்பாட்டில் வாசிப்பு மாத நிறைவு நிகழ்வும், பரிசில் வழங்கல் வைபவமும் சாவகச்சேரி பிரதேசசபை மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளரின் ஏற்பாட்டில் உறுப்பினர்களின் நிதிப் பங்களிப்புடன் 2018 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய மட்டத்தில் இரண்டாம் இடமும் பெற்ற சாவகச்சேரி ஆரம்பப் பாடசாலை மாணவி நவாஸ்கன் நதிக்கு வங்கிக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டு தவிசாளரால் வங்கிப் புத்தகம் கையளிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம். (படம்:-சுபேசன்)

# வெட்கம் இருந்தால் ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து வெளியேற வேண்டும்

## தமிழ் முற்போக்கு முன்னணி தலைவர் தெரிவிப்பு



(கொழும்பு)

வெட்கம் இருந்தால் சட்டவிரோத அரசாங்கம் தயவுசெய்து ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து வெளியேற வேண்டும் என தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வு முடிவடைந்த பின்னர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் அறையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

122 உறுப்பினர்கள் என்பது பெரும்பான்மை என்பதை யாரும் அறிவார்கள். இன்னும் பலர் எங்களுடன் இணைய இருக்கின்றனர்.

அதுதொடர்பில் எங்களுக்கு தகவல் கிடைத்திருக்கின்றது எனவும் இதன்போது தெரிவித்துள்ளார். (2-7)

# முல்லையில் மழை வெள்ளத்தினால் 15 குளங்கள் பாதிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் 15 குளங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கமநல சேவை திணைக்கள புள்ளிவிபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த கனமழை காரணமாக 05 குளங்கள் பாரியளவில் உடைப்பெடுத்துள்ளது என்றும் 10 குளங்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கமநல சேவை திணைக்களத்தின் கீழ் உள்ள பாண்டியன்குளம் பிரதேசத்தில் உள்ள பெரியகுளம்,ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள கோடாலிக்கல்லு குளம், சின்னச் சாளம்பன் குளம்,ஒலுமடு பிரதேசத்தில் உள்ள கிழவன்குளம், குமுழமுனை பிரதேசத்தில் உள்ள நித்தகை குளம் ஆகியன உடைப்பெடுத்துள்ளதுடன் பனிக்கை முறிப்பு குளம்,அம்பலவன் பற்குளம்,சின்ன இத்திமடு குளம், கணக்கனார்குளம், வன்னிவிளாங்குளம்,அலைகரைபோட்ட கல்லு குளம்,வாணிமோட்டை குளம், புலிமைச்சிநாதகுளம், நெடுங்கேணிக் குளம், பாலப்பணிகுளம் உள்ளிட்ட குளங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றை சீர்செய்யும் நடவடிக்கையில் படையினர் மற்றும் கமநலசேவை திணைக்களத்தினர், விவசாயிகள் ஆகியோர் ஈடுபட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைத் திணைக்கள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# மூவாயிரத்து 389 வரையான மீனவர்களின் தொழில்சார் நடவடிக்கை நெருக்கடியில்

## பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 128 கிலோ மீற்றர் கரையோரப்பகுதிகளில் கடற்றொழில்களில் ஈடுபட்டு வரும் மூவாயிரத்து 389 வரையான மீனவர்கள் தமது தொழில்சார் நடவடிக்கைகளில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள எழுபது வீதமான மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்றபோதும் மொத்தமாகவுள்ள குடும்பங்களில் நான்காயிரத்து 205இற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இதில் தற்போது கரைச்சி கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சுமார் 128 கிலோ மீற்றர் நீளமான கரையோரப் பகுதிகளில் மூவாயிரத்து 389 பேர் மீன்பிடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் வெளி மாவட்ட மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் காரணமாக தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூடுதலான கரையோரப் பகுதிகளில் இறங்கு துறைகள் இன்மை, உரிய தொழில் உபகரணங்கள் இன்மை, வெளிச்ச வீடுகள் இன்மை என்பன காரணமாக தமது தொழில் நடவடிக்கைகளில் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாவட்டத்தில் உள்ள நன்னீர் குளங்களின் கீழ் நன்னீர் மீன்பிடிகளில் ஈடுபட்டு வரும் 750 வரையான குடும்பங்களும் நாட்டில் கடந்த காலங்களில் நிலவிய வரட்சியின் காரணமாக குளங்களின் நீர் மட்டம் குறைவடைந்து காணப்பட்டமையால் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# பாலாவி கடற்றொழிலாளர்கள் தொழிலுக்கு செல்லும் பிரதான பாதையை புனரமையுங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பாலாவி பகுதி கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்குச் செல்லும் பாதையை புனரமைத்துத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கடற்றொழில் கிராமங்கள் பல கடந்த 1990 ஆம் ஆண்டுக்குப்பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமாக அழிவடைந்துள்ளன.

குறிப்பாக, கடற்றொழில் கிராமங்களின் கடற்றொழில் இறங்குதுறைகள்,வீதிகள், மீனவர் ஓய்வு மண்டபங்கள், உவர் நீர்தடுப்பணைகள் என்பனவும் சேதமடைந்துள்ளன.

மீள்குடியேற்றத்தின் பின்னர் குறித்த கட்டுமானங்கள் மீள அபிவிருத்தி செய்யப்படுகின்றபோதும் குறிப்பிட்ட சில கடற்றொழில் கிராமங்களில் எந்த ஒரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் பூநகரி பாலாவிப்பகுதியில் கடற்றொழிலுக்குச்செல்லும் பிரதான பாதை புனரமைக்கப்படாது காணப்படுவதனால் மீன்பிடி உபகரணங்களை கடலுக்குக் கொண்டு செல்வதற்கும் கடலில் இருந்து கடல் உணவுகளை வெளியில் கொண்டு வருவதற்கும் பயன்படுத்துகின்ற பாதை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதனால் தாங்கள் பல்வேறு சௌகரியங்களை எதிர்கொள்வதாக இப்பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

## நீரிழிவு தினத்தை முன்னிட்டு

# வவுனியா வைத்தியசாலையில் விழிப்புணர்வு செயலமர்வு



(குருமன்காடு)

உலக நீரிழிவு தினம் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில் வவுனியா வைத்தியசாலையிலும் நீரிழிவு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் நீரிழிவு நோய் தடுப்பு வைத்திய நிபுணர் திருமதி. மகேசி அமரவர்த்தன தலைமையில் இடம்பெற்றிருந்தது.

வவுனியா வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இச்செயலமர்வின் போது நீரிழிவு நோய் வருவதற்கான காரணங்கள் மற்றும் அதனை தடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் நீரிழிவு தினம் தொடர்பாகவும் வைத்திய நிபுணர்களினால் பொது மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஹனீபா, வவுனியா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் திருமதி. தமிழினி, தாதியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250-281)

# முல்லைத்தீவில் மழை வெள்ளத்தால் 427 குடும்பங்கள் பாதிப்பு;90 வீடுகள் சேதம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த நாட்களில் பெய்த மழை காரணமாக 427 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 155 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மாவட்டத்தில் முழுமையாக 90 வீடுகளும் பகுதியாக 18 வீடுகளும் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கான சமைத்த உணவு வழங்கப்பட்ட அதேவேளையில் அவர்களுக்கான உலருணவு வழங்குவதற்கான நடவடிக்கையில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் வெள்ளம் காரணமாக ஐந்து குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. பத்து குளங்கள் கசிவு ஏற்பட்டுள்ளன.

சூறாவளியின் தாக்கம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஏற்படக்கூடியதாக இருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. அதற்கமைய முன்னாயத்த ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (2-281)

# அனர்த்தத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடல்

## கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது



(கிளிநொச்சி)

வடக்கை தாக்கவுள்ளதாக எச்சரிக்கப்படும் கஜா புயலின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பது மற்றும் முன் ஏற்பாடுகள் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதேச செயலாளர்கள், திணைக்கள அதிகாரிகள், படையினர், பொலிஸார் உள்ளிட்ட பலர் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர். குறித்த கலந்துரையாடலில் அனர்த்தத்திலிருந்து மக்களை பாதுகாப்பது தொடரபிலும், பாதுகாப்பான இடங்களை அடையாளம் காணல், சுகாதாரம், குடிநீர், மின்சாரம் மற்றும் மரங்கள் முறிவதிலிருந்து ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து மக்களை பாதுகாத்தல், முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டதுடன், பொருத்தமான திணைக்களங்கள் மற்றும் பொலிஸார், படையினரிடம் பொறுப்புக்களும் கையளிக்கப்பட்டன. குறித்த கலந்துரையாடல் தொடர்பில் அரசாங்க அதிபர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வடக்கை தாக்கவுள்ளதாக எச்சரிக்கப்படும் புயலிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கரையோரங்களில் உள்ள மக்களையும் மீனவர்கள் ஆழ்கடலுக்கு செல்லாத வகையிலும் தொடர்ச்சியாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் சுகாதாரம் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாகவும் அனர்த்தத்திலிருந்து மக்களை பாதுகாப்பது தொடர்பில் குறித்த விசேட கலந்துரையாடல் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அனர்த்தம் ஒன்று ஏற்பட்டால் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் இதன்போது குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (2)



# அனர்த்தத்தால் ஏற்படுகின்ற விளைவுகளை கட்டுப்படுத்த அனைத்தும் தயார் நிலையில்

## வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(குருமன்காடு)

வவுனியாவில் கஜா சூறாவளியால் அனர்த்தம் ஏற்பட்டால் அதனை கட்டுப்படுத்தும் வகையில் முப்படையினர் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தயார் நிலையில் உள்ளதாக மாவட்ட அரச அதிபர் ஐ.எம். ஹனீபா தெரிவித்துள்ளார்.

நாட்டின் காலநிலை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீரற்ற காலநிலை காரணமாக கஜா சூறாவளியானது யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் மையம் கொண்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கடுமையான காற்று வீசக் கூடும் என்பதுடன் கடுமையான மழையும் பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இந்த நிலையை கருத்தில் கொண்டு மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளின் ஊடாக கிராம மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், முப்படையினர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு, கிராம மட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு என்பன அனர்த்த நிலையை எதிர்கொள்ளக்கூடிய நிலையில் தயார்படுத்தப்பட்டுள்ளனர். இந்த அவசர நிலைமைக்கு ஏற்ப பொதுமக்களை அவதானமாக இருக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, கடந்த நான்கு நாட்களாக அதிகாலை தொடக்கம் காலை 8 மணிவரை கடுமையான பனிமூட்டம் காணப்படுவதுடன், ஏ-9 வீதியில் பயணிக்கும் சாரதிகள் கடும் சிரமங்களையும் எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# கழிவுகளாக எறியப்படும் உணவுகளை வளர்ப்பு பிராணிகளுக்கு உணவாக்குங்கள்

## யாழ்.மாநகரசபை உறுப்பினர் யோகேஸ்வரி யோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதியில் காணப்படும் உணவகங்கள் மற்றும் தனியார் விடுதிகள், வீடுகளில் இருந்து கழிவுகளாக அகற்றப்படும் உணவுப் பொருட்களை வளர்ப்புப் பிராணிகளுக்கும் பன்றி போன்ற மிருகங்களுக்கும் உணவாக்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாநகரசபை உறுப்பினர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.மாநகரசபையின் மாதாந்த அமர்வு முதல்வர் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


யாழ்.மாநகர சபையின் கழிவகற்றும் ஊழியர்களால் நாளாந்தம் பல நூறு கிலோ தொகையளவான உணவுப் பொருட்கள் கழிவகற்றும் வாகனங்களில் ஏற்றப்பட்டு குறிப்பிடப்பட்ட இடங்களில் கொண்டு சென்று கொட்டப்படுகின்றன. இவ்வாறு கொட்டப்படுவதால் உணவுப் பொருட்கள் பல வீண்விரயமாக்கப்படுகின்றன. இந்த உணவுப் பொருட்களை தனியாக சேகரித்து மாநகரின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் கால்நடைகள் மற்றும் வளர்ப்புப் பிராணிகளுக்கு உணவாக மாற்றிக்கொள்ள முடியும்.

இதற்கான உரிய நடவடிக்கைகளை துறைசார் தரப்பினரது ஆலோசனைகளூடாக பெற்று நடைமுறைப்படுத்துவதனூடாக விலங்குகளுக்கான உணவுகளை வழங்க முடியும் என்பதுடன் உணவின்றி அலைந்து திரியும் மிருகங்களின் நலன்களையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றார்.

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவின் குறித்த யோசனையை சபை ஏற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகிழங்கேணிப் பகுதியில் மண் பறிப்பு

## வெள்ளத்தை அகற்ற நகரசபை நடவடிக்கை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினரால் மகிழங்கேணிப் பிரதேசத்தில் வெள்ளப் பாதிப்பினை எதிர்கொள்ளும் வீடுகளுக்கு மண் இட்டு நிரவப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாரி காலத்திலும் சாவகச்சேரி கோவிற் குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள மகிழங்கேணிப் பகுதியில் வெள்ள நீர் தேங்கி அப்பகுதி மக்கள் சிரமப்படுவதால் நகரசபையினர் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு லோட் மண் பறித்துள்ளனர்.

இருப்பினும் அப்பகுதி மக்கள் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், நகர சபையினரால் பறிக்கப்பட்ட தலா ஒரு லோட் மண் எமது வீட்டு வாசல் படியில் நிற்கும் வெள்ளத்தை அப்புறப்படுத்துவதற்கே போதாமல் உள்ளது. ஒரு காணியில் 15 லோட் மண்ணிற்கு மேல் பறித்தால் மாத்திரமே வெள்ள நீர் தேங்காது கடலுக்குச் செல்லும். அத்துடன் மேலும் சில வீடுகளுக்கு நகரசபையினரால் மண் பறிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

மகிழங்கேணிப் பகுதியில் 50இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் கடந்த 2016 ஆம் ஆண்டு இடம் ஒதுக்கிக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. பிரதேச செயலகம் வழங்கிய காணிகளில் சுமார் 30 குடும்பங்கள் எந்தவொரு அடிப்படை வசதிகளும் இன்றிக் குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். மண் பறிக்கும் பணிகளில் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்களும் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# அரச சிறுவர் நாடகப் போட்டியில் மகாஜனவுக்கு 22 தேசிய விருதுகள்







(யாழ்ப்பாணம்)

அரச பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற அரச சிறுவர் நாடகப்போட்டியில் யாழ்.மகாஜனக் கல்லூரி 22 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது.

அரச சிறுவர் நாடக விழா 2018 அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் தமிழ்மொழி பிரிவில், யாழ். மகாஜனக் கல்லூரி மாணவர்கள் பங்குபற்றிய "வண்டிப் பயணம்" என்ற சிறுவர் நாடகம் முதலாம் இடத்தினை பெற்று தேசிய விருதினை பெற்றதுடன், திறந்த பிரிவில் "கூடி விளையாடு பாப்பா" என்ற சிறுவர் நாடகம் இரண்டாம் இடத்தைப் பெற்றது. இவ் இரு நாடகங்களையும் உள்ளடக்கி 22 தேசிய விருதுகளை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் பெற்றுள்ளனர்.

குறித்த இரு நாடகங்களையும் ஆசிரியர் து.அயூரன் நெறியாள்கை செய்திருந்தார். (இ-9)

# விநாயகர் விரத உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரதத்தை முன்னிட்டு 23.11.2018 வெள்ளிக்கிழமை தொடக்கம் தினமும் பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூஜை, பஞ்சமுக விநாயக பெருமானுக்கு விசேட அர்ச்சனையைத் தொடர்ந்து பிள்ளையார் கதை படிப்பு நடைபெறும்.

12.12.2018 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பின்னர் மகா கணபதி கோமமும் மாலை கஜமுகாசூரன் போர் என்பன நடைபெற்று மறுநாள் 13.12.2018 வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூஜைகளுடன் விநாயக பெருமான் திருவீதி வலம் வருதலை தொடர்ந்து பெருங்கதை படிப்பு பூர்த்தியாகும். (இ)

# “அரசியல் நெருக்கடியைக் காட்டி 1000 ரூபா சம்பளக் கோரிக்கையை புறந்தள்ளக்கூடாது



(ஹற்றன்)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்ற தன்மை மற்றும் அரசியல் வாதிகளின் அக்கறையின்மை என்பவற்றை காரணம் காண்பித்து தோட்டத் தொழிலாளர்களின் சம்பளக் கோரிக்கையை புறம் தள்ளி விடப்படக் கூடாது என பெருந்தோட்டத் தொழிலாளர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முதலாளிமார் சம்மேளனத்திற்கு குறித்த தொழிற்சங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர் கூட்டமைப்பு செயலாளர் நாயகமும் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளருமான எஸ்.இராமநாதனால் முதலாளிமார் சம்மேளனத்திற்கு குறித்த கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முன்பள்ளிகளை ஒன்றிணைக்கும் செயற்றிட்டம் விரைவில் ஆரம்பம்

## உதவிக் கல்வி பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நலிவடைந்த நிலையிலுள்ள முன்பள்ளிகளை ஒன்றிணைத்து வினைத்திறனாக நடத்தும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண முன்பள்ளிகளின் உதவிக்கல்விப்பணிப்பாளர் சிற்றம்பலம் கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் பல பிரதேசங்களில் குறைந்த சிறுவர்களுடன் முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. 15 தொடக்கம் 20 சிறுவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில் சுற்றுநிருபம் உள்ளது. ஆனால் தற்போதும் சில முன்பள்ளிகளில் 15 இற்கும் குறைவான சிறுவர்களுடன் முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன.

அதிலும் குறிப்பாக பல பகுதிகளில் முகாம்களில் வசித்து வந்த சிறுவர்கள் பலர் முகாம்களுக்கு அருகில் உள்ள முன்பள்ளிகளில் கற்று வந்தார்கள். தற்போது அவர்கள் மீள்குடியேறியுள்ளதால் அந்த முன்பள்ளிகளில் சிறுவர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

எனவே அருகருகில் நலிவடைந்த நிலையில் உள்ள முன்பள்ளிகளை ஒன்றாக இணைத்து வினைத்திறனாக எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கும் சிறந்த சமூகத்தை உருவாக்குவதற்குமான புதிய செயற்றிட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 10 ஆவது மத்திய வணிகம் இதழ் வெளியீடும் வணிக தினமும் அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடகிழக்கு மாகாண சமூகப் பாதுகாப்புச் சிரேஷ்ட இணைப்பதிகாரி பா.பிரதீபன் கலந்து சிறப்பித்ததோடு இதழையும் வெளியிட்டு வைத்தார்.

# பரிசளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் மடிக்கே பஞ்ஞசீக வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் திருமதி.சி.கணேசானந்தன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் நா.சிவநேசன் கலந்துகொள்வார். (இ-9-136)

# பிரதமர் மகிந்தவுக்கே ஆதரவு

## பிரியந்த எம்.பி.உறுதி

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவுக்கு ஆதரவு தெரிவிப்பது தொடர்பில் தான் எடுத்த தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக்க பிரியந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அசோக்க பிரியந்த புதிய பிரதமராக மகிந்த நியமிக்கப்பட்டதும் மகிந்தவுக்குக் ஆதரவு தெரிவித்தார்.

அத்துடன் புதிய அரசாங்கத்தில் அசோக்க பிரியந்தவுக்கு கலாசார அலுவல்கள் மற்றும் வடமத்திய மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வுகளின் பின்னர் புதிய அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து புதிய அரசாங்கத்தின் அமைச்சர், பிரதியமைச்சர் பதவிகளைப் பெற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஸ், வசந்த சேனாநாயக்க ஆகியோர் தமது அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகி, மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொண்ட நிலையிலேயே அசோக்க பிரியந்த இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




## சிதம்பர திருச்செந்திநாதனின் நினைவுப் பகிர்வு நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

இணுவில் கலை இலக்கிய வட்டமும் எழு கலை இலக்கியப் பேரவையும் இணைந்து நடத்தும் இணுவையூர் எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், நிர்வாக உத்தியோகத்தர் சிதம்பர திருச்செந்திநாதனின் நினைவுப் பகிர்வு நிகழ்வு நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இணுவில் அறிவாலயத்தில் (இணுவில் கந்தசுவாமி கோவில் முன்பாக) இணுவில் கலை இலக்கிய வட்டத் தலைவர் கலாநிதி க.ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறும். (இ-5)

## சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்

# தந்தைக்கு போதை கொடுத்த தனயன் கைது

## பல்மருந்து குப்பியில் ஹெரோயின்

(கொழும்பு)

சிறைக்கைதி ஒருவருக்கு மிக சூட்சுமமான முறையில் 50 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளைக் கொண்டு சென்ற குறித்த கைதியின் மகன் உட்பட மூவரை பதுளை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

குறித்த சிறைக் கைதி போதைப் பொருள் விற்பனை குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு பதுளை பிரதான சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சிறைக்குள்ளிருந்தவாறே போதைப் பொருளை ஏனைய சிறைக் கைதிகளுக்கு விற்பனை செய்யும் முகமாகவே சிறைக் கைதியின் மகன் மிக சூட்சுமமான முறையில் தனது தகப்பனுக்கு வழங்கும் போது பதுளைப் பொலிஸாரால் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டான்.

அத்தோடு குறித்த இளைஞனுடன் சென்றிருந்த ஏனைய இருவரையும் பதுளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல்மருந்து குப்பியில் பல் மருந்தினை அகற்றிவிட்டு அந்தக் குப்பியில் ஹெரோயினை வைத்து நிரப்பி சிறைக்கைதிக்கு வழங்கப்பட்டமை பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

மேலும் கைது செய்யப்பட்ட 'இளைஞனிடம் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த மேலும் ஐந்து பக்கெற்றுக்கள் ஹெரோயின் போதைப் பொருளும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் விசாரணையின் பின்னர் பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாக பதுளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரோகன வனிகசேக்கர தெரிவித்தார். (இ-7)

# கறுப்புப் பட்டி அணிந்து தராசு ஏந்தி நீதி தேவதையாக சபைக்குள் நுழைவு



(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜனநாயகத்தை உறுதிப்படுத்தியதை முன்னிட்டு ஐ.தே.க.நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர்கள் ஏழு பேர் கறுப்புப் பட்டி அணிந்து தராசு ஏந்தி நீதி தேவதையாக சபைக்கு முன் பிரவேசித்தனர்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பில் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜனநாயகத்தை உறுதிப்படுத்தியதை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் நோர்வூட் சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை சபைக்கு முன்பு கறுப்புப் பட்டி அணிந்து தராசுகளை ஏந்திய வண்ணம் ஆதரவாக பிரவேசித்தனர்.

கடந்த 26 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திடீரென புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை நியமித்தார் அதன் பிறகு இம் மாதம் 16 ஆம் திகதி வரை பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது. சபாநாயகரின் வேண்டுகோளுக்கிணங்க சபை அமர்வு இம் மாதம் 14 ஆம் திகதி கூட்டப்படும் என உறுதி வழங்கிய ஜனாதிபதி திடீரென விஷேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டதன் காரணமாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

அந்த அடிப்படையில் பாராளுமன்றம் உடனடியாக கூட்டப்பட வேண்டும் என கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு ஜனநாயகத்தை உறுதிப்படுத்தியதை முன்னிட்டு நேற்று முன்தினம் நோர்வூட் பிரதேசசபையின் அமர்வின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் ஏழு பேரும்கறுப்புப்பட்டி அணிந்து தராசுகளை ஏந்திய வாறு பிரவேசித்தனர்.(இ-7)

# சபையில் இரத்தம் ஓடியதற்கு சபாநாயகரே காரணம்-எஸ்.பி.



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று ஏற்பட்ட குழப்ப நிலைக்கு சபாநாயகரே காரணமாவார் என குற்றம் சாட்டியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க, சபாநாயகர் நிலையியற் கட்டளையின் பிரகாரம் செயற்பட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் சபாநாயகர் மகிந்த ராஜபக்ஷவின் உரைக்கு வாக்கெடுக்க அனுமதித்ததாலே பாராளுமன்றத்துக்குள் குழப்பம் ஏற்பட்டது.

சபாநாயகர் கட்சி சார்பாக நடந்துகொள்ளாமல் நேர்மையாகச் செயற்பட்டிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது.

சபை அமர்வில் பாராளுமன்ற உறுப்பினர்களின் இரத்தம் ஓடியதற்கு சபாநாயகரின் பக்கச்சார்பான செயற்பாடே காரணமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற அமர்வு நேற்று முடிவடைந்த பின்னர் ஆளுங்கட்சியினால் உறுப்பினர் அறையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## யாழ்.களரி 10 ஆவது இதழ் அறிமுகம்



(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர்களுக்கான கருத்தமர்வும் "யாழ். களரி" 10 ஆவது இதழ் அறிமுகமும் கடந்த 9 ஆம் திகதி கியூடெக் கரித்தாஸ் மண்டபத்தில் இயக்குநர் அருட்பணி ச.இ.யூஜின் தலைமையில் நடைபெற்றது.

இதில்வளவாளராக யாழ். பல்கலைக்கழக அரசியல் துறை விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம்மற்றும்சமூக மட்டத்தலைவர்களும் கலந்து கொண்டனர். (இ-5-107)

# ரஷ்யாவுடன் சமாதான உடன்படிக்கை செய்யத் தயாராகும் ஜப்பான்-ஷின்சோ

## ரஷ்ய ஜனாதிபதி வரவேற்பு

(டோக்கியோ)

ரஷ்ய மற்றும் வடகொரிய பிரச்சினைகள் தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் பேச்சு வார்த்தை நடத்தி சமாதான உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாக ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே தெரிவித்தார்.

சிங்கப்பூரில் நடை பெற்று வரும் ஆசியான் மாநாட்டின்போது நேற்று முன்தினம் புதன்கிழமை ஜப்பான் பிரதமர் இதனை தெரிவித்தார்.

இந்நிலையில், இரு தரப்பு ஒத்துழைப்பின் அனைத்து அம்சங்கள் தொடர்பாகவும் ஜப்பானுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கான வாய்ப்பு குறித்துக் மகிழ்ச்சியடைவதாக ரஷ்ய ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், மொஸ்கோவுடன் உடனடியாக சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட முடியாது என டோக்கியோ கடந்த வாரம் தெரிவித்திருந்த நிலையில், ஜப்பான் பிரதமரின் இக் கருத்தை வரவேற்பதாகக் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் இறுதியில் சோவியத் படைகளால் தீவுப் பகுதிகள் கைப்பற்றப்பட்டதை தொடர்ந்து ரஷ்யாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே கடந்த ஏழு தசாப்தங்களாக சர்ச்சை நீடித்து வருகிறது.

இதன் விளைவாக இரு தரப்பிற்கும் இடையிலான விரோத செயற்பாடுகள் தொடர்ந்து நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# பாரதம்

## ஐ.நா.சபை கொண்டு வந்த மரணதண்டனை; தீர்மானத்தை எதிர்த்து இந்தியா வாக்களிப்பு

### இந்தியாவுக்கான தூதர் விளக்கம்

(நியூயோர்க்)

ஐ.நா. சபை கொண்டுவந்த மரண தண்டனை வரைவு தீர்மானத்தை எதிர்த்து இந்தியா வாக்களித்தது ஏன் என்பது குறித்து இந்தியாவுக்கான நிரந்தர தூதர் பலோமி திரிபாதி விளக்கம் அளித்தார்.

ஐ.நா. பொதுச் சபையின் 3ஆவது குழு சார்பில் மரண தண்டனையை நிறைவேற்றுவது குறித்த வரைவு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதன்மீது நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடந்தது.

அதில், இந்த சட்டத்துக்கு எதிராக இந்தியா வாக்களித்தது. நடைபெற்ற வாக்கெடுப்பில் மரண தண்டனை வரைவு தீர்மானத்துக்கு ஆதரவாக 123 வாக்குகளும், எதிராக 36 வாக்குகளும் கிடைத்தன.

மேலும் இந்த வாக்கெடுப்பில் 36 நாடுகள் கலந்து கொள்ளவில்லை.

மரண தண்டனை வரைவு தீர்மானத்துக்கு எதிராக இந்தியா வாக்களித்தது ஏன் என்பது குறித்து ஐ.நா. சபையின் இந்தியாவுக்கான நிரந்தர தூதர் பலோமி திரிபாதி உரையாற்றினார்.

அப்போது இந்த தீர்மானம் மரண தண்டனையை ஒழிக்கும் நோக்கத்திலும், தற்காலிகமாக ஒத்திவைக்கும் நிலையிலும் உருவாக்கப்பட்டு உள்ளது. இது இந்திய சட்டத்துக்கு எதிரானது. எனவே இந்த தீர்மானத்துக்கு எனது முழு எதிர்ப்பை தெரிவிக்கிறேன் என்றார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "இந்தியாவில் மிகவும் அரிதாக மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது. இங்கு குற்றங்கள் மிகவும் வெறுப்பாக பார்க்கப்படுகிறது. அவற்றை சமூகத்தினர் தங்கள் மனச்சாட்சிக்கு எதிராக கருதுகின்றனர்.

குற்றவாளிகள் மீதான வழக்குகள் சுதந்திரமாக செயற்படும் நீதிமன்றங்கள் மூலம் விசாரிக்கப்படுகின்றன. தண்டனையை பரிசீலனை செய்ய மேன்முறையீட்டுக்கு உரிமை வழங்கப்படுகிறது" என மேலும் தெரிவித்தார். (4-7)

## பொலிவியாவின் 15 ஆம் நூற்றாண்டு பழங்குடியினரின் சமாதி கண்டுபிடிப்பு



(லாபாஸ்)

இலத்தின் அமெரிக்காவின் பொலிவிய நாட்டில் சுமார் 500 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த பழங்குடி மக்களின் சமாதியொன்று அண்மையில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி பல தொல்பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிவிய அகழ்வாராச்சியாளர்கள் குழுவொன்று கூறுகின்றது. 15 ஆம் நூற்றாண்டில் அந்த பிராந்தியத்தில் அதிகளவில் பழங்குடியினர் வாழ்ந்து இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

பொலிவியாவின் கலாசார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் அதிகாரிகள் கடந்த மூன்று மாதங்களாக மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகளின் அடிப்படையில் பெருமளவு தொல்பொருட்கள் அங்கிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர் வென்டர்சன் எஸ்குவார்டோ தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் பெகாஜஸ் எனப்படும் பழங்குடி வர்க்கத்தினர் இந்த பிராந்தியத்தில் கூட்டமாக வாழ்ந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

பொலிவிய தலைநகர் லாபாஸ்ஸில் இருந்து 30 கிலோமீற்றர் தெற்மேற்காக அமைந்துள்ள தரைகீழ் கல்லறையொன்றில் பழங் குடியினரின் கல்லறையாக கருதப்படும் இடத்தில் இருந்து மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அதில் ஒரு கல்லறை போன்ற அமைப்பில் இருந்து நினைவுச்சின்ன தொல்பொருள் பண்புகளுடன் பல அரும்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதுதவிர, கற்பாறையில் குகைபோன்ற அமைப் பொன்றில் இருந்து 108 தனிப்பட்டவர்களின் மனித எச்சங்கள் ஆராய்ச்சியாளர்களால் மீட்கப்பட்டு பகுப் பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வென்டர்சன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த தொல்பொருட்கள் இன்கா கலாசாரத்தை தெளிவாக புலப்படுத்தும் வகையில் உள்ளன. அவற்றில் இன்கா இல்லாத மற்ற கலாசாரங்களைச் சேர்ந்த பழங்குடியினரின் பொருட்களும் இருந்துள்ளன.

ஆனால் பொலிவியாவில் வாழ்ந்ததாக கருதப்படும் அய்மாரா வர்க்கத்தினரின் உடைமைகள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை இரண்டு பாரிய கல்லறைகள் தோண்டப்பட்டுள்ள நிலையில், இன்னொரு கல்லறைப்பகுதி தோண்டப்படாத நிலையில் உள்ளது.

15 ஆம் நூற்றாண்டின் மத்தியில் இன்கன் சாம்ராஜ்ஜியத்தால் கைப்பற்றப்பட்ட வரை பொலிவியா மேட்டு நிலங்களில் பழங்கால அய்மாரா இராச்சியம் இயங்கி வந்தது.

எனினும், பெகாஜஸ் பழங்குடி மக்கள் இன்கன் பேரரசின் வெற்றியால் அங்கிருந்து அகற்றப்படவில்லை. இருந்த போதும் அந்த மக்கள் ஒரு வகை தொற்று நோய் காரணமாக பாதிக்கப்பட்டு உயிரிழந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

இந்த ஆராய்ச்சியானது தனிப்பட்ட மற்றும் முன்னெப்போதும் நிகழாத ஒரு விடயமாக இருப்பதாக பொலிவியாவின் சுற்றுலா மற்றும் கலாசாரத்துறை அமைச்சர் வில்மா அலனோகா தெரிவித்துள்ளார். (4-7)

## அமெரிக்க தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகரை நீக்கவும்

### மெலனியா ட்ரம்ப் வலியுறுத்து



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பின் துணை ஆலோசகரை பணியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி ட்ரம்பிற்கு அவரது மனைவி மெலனியா ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகராக மீரா றிசார்டெல் செயற்பட்டு வருகின்றார்.

இந்நிலையில், கடந்த ஒக்டோபர் மாதம் ஆபிரிக்கா சென்றிருந்தபோது.

மெல னியா ட்ரம்ப் மற்றும் மீரா றிசார்டெல்க்கு இடையே தகராறு ஏற்பட்டதாக அமெ ரிக்க ஊடகங்களில் செய்தி வெளியானது.

இந்த சம்பவம் குறித்து வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தாத நிலையில், மீரா றிசார்டெல்-ஐ பதவியில் இருந்து நீக்குமாறு, ட்ரம்பிடம் மெலனியா வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, ட்ரம்பின் அலுவலக விவகாரத்தில் மெலனியா தலையிடுவதற்கு, வெள்ளை மாளிகை அதிகாரிகள் சிலர் அதிருப்தி தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(4-7)

## கலிபோர்னிய

## உயிரிழப்பு 5

(பாரடைஸ்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் பரவிவரும் காட்டுத்தீயில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது.

அமெரிக்காவில் 3 இடங்களில் பரவி வருகிற காட்டுத்தீயின் போக்கு தீவிரமாக உள்ளது. தீயைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக தெற்கு மற்றும் வடக்கு முனைகளில் இருந்து ஆயிரக்கணக்கான தீயணைப்பு படை வீரர்கள் போராடி வருகிறார்கள். ஒரு லட்சத்து 25 ஏக்கர் நிலப்பரப்பில் பரவி உள்ள காட்டுத்தீயில் 30 சதவீதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாதம் முழுக்க போராடினால் தான் தீயை முழுமையாக கட்டுப்படுத்த முடியும் என சொல்லப்படுகிறது.

அமெரிக்க காட்டுத்தீ வரலாற்றில் மிக மோசமான காட்டுத்தீ இதுதான் என்றும் கூறப்படுகிறது. தீயணைப்பு பணியில் முழு மூச்சுடன் போராடி வருகிற வீரர்களுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் பாராட்டு தெரிவித்துள்ளார்.

மாகாணம் முழுவதும் இந்த காட்டுத்தீக்கு பலியானவர்கள் எண்ணிக்கை நேற்றைய நிலவரப்படி 50 ஆக உயர்ந்துள்ளது. (4-7)



## காசா எல்லை வன்மு

## இஸ்ரேல் பாதுகாப்பு அ

(இஸ்ரேல்)

காசா எல்லையில் தொடரும் வன்முறைகளின் எதிரொலியாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் அவிக்டோர் லிபர்மன் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

காசா எல்லையில் இடம்பெற்றுவரும் பலஸ்தீன கிளர்ச்சியாளர்களுடனான மோதலை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் போர்நிறுத்த உடன்படிக்கையை ஏற்படுத்துவது தொடர்பான தீர்மானம் இஸ்ரேல் அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், அமைச்சரவையின் இந்த முடிவானது பயங்கரவாதிகளுக்கு சரணடைவதற்கு ஒப்பானது என விமர்சித்த பாதுகாப்பு அமைச்சர் நேற்று முன்தினம் புதன்கிழமை தனது இராஜினாமா குறித்து அறிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இஸ்ரேலை இலக்குவைத்து பலஸ்தீன கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட 460 ரொக்கெட் தாக்குதல்களில் எட்டு பேர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து பலஸ்தீனுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் தரப்பு, கிளர்ச்சியாளர்களின் 160 நிலைகளை இலக்குவைத்து குண்டு தாக்குதல்கள் மேற்கொண்டது.

இவ்வாறாக இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்திற்கும் இடையே வன்முறை நீடித்து வருகின்ற நிலையில், அதனை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில்



போர்
தொட
வைய
னம்
அ
ப்பை

# வெளிநாடு

# ...யாவில் காட்டுத்தீ
# ... 50 ஆக உயர்வு





## பிரெக்சிற் உடன்படிக்கை வெளியீடு



(புருசெல்ஸ்)

பிரிட்டன் பிரதமர் தெரசா மே தயாரித்த 585 பக்கங்களை கொண்ட பிரெக்சிட் வரைவு உடன்படிக்கையை பிரிட்டனும் ஐரோப்பிய யூனியனும் நேற்று கூட்டாக வெளியிட்டுள்ளன.

ஐரோப்பிய யூனியனில் இருந்து விலக பிரிட்டன் பாராளுமன்றம் எடுத்த முடிவு தொடர்பாக கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்றபொது வாக்கெடுப்பில் விலகும் தீர்மானத்தை ஆதரித்து அதிகம் பேர் வாக்களித்தனர்.

இதையடுத்து, ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பாக அந்நாட்டின்பிரதமர் தெரசா மே சமர்ப்பித்த வரைவு உடன்படிக்கைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

வெளியேற்றத்துக்கு பின்னர் ஐரோப்பிய யூனியனில் உள்ள நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் இடையினான எதிர்காலநிதி பரிமாற்றம், பாதுகாப்பு, விசா மற்றும் குடியேற்றக் கொள்கை உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

மேலும், இனி செயற்பாட்டுக்கு வரும் பிரிட்டன் அரசின் கொள்கை முடிவுகள் தொடர்பாகவும் தனியாக ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், 585 பக்கங்களை கொண்ட பிரெக்சிட் உடன்படிக்கையை ஐரோப்பிய யூனியனும் பிரிட்டன் அரசும் நேற்றைய தினம் கூட்டாக வெளியிட்டுள்ளன.

லண்டன் பாராளுமன்றமும் ஐரோப்பிய யூனியன் நாடுகளை சேர்ந்த தலைவர்களும் ஒப்புதல் அளித்த பின்னர் இந்த உடன்படிக்கையில் உள்ள அம்சங்கள் அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (4-7)

## தீபாவளி வாழ்த்து செய்தியில் இந்துக்களை மறந்தார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

தீபாவளி வாழ்த்து செய்தியில் இந்துக்களை குறிப்பிட்டு வாழ்த்த மறந்த டொனால்ட் ட்ரம்ப் கடும் விமர்சனங்களுக்கு ஆளானார்.

அமெரிக்காவில் வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் தீபாவளி பண்டிகை கடந்த செவ்வாய்க்கிழமை கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் ஜனாதிபதி ட்ரம்ப் பேசும்போது, "இந்தியர்கள் கடினமான உழைப்பாளிகள், இந்தியாவை சேர்ந்த பல லட்சம் கடின உழைப்பாளிகளுக்கு தாயகம் அமெரிக்கா" என புகழாரம் சூட்டினார்.

மேலும், "பிரதமர் நரேந்திர மோடி மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளேன், அவரிடம் விரைவில் பேசு வேன்" எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த கொண்டாட்டத்தையொட்டி அவர் டுவிட்டரில் ஒரு பதிவு வெளியிட்டார். அந்தப் பதிவில் அவர், நாம் தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதற்காக இங்கே கூடி உள்ளோம். தீபாவளி பண்டிகை அமெரிக்காவிலும், உலகெங்கும் உள்ள புத்த மதத்தினர், சீக்கிய மதத்தினர், சமண மதத்தினர் ஆகியோருக்கு விடுமுறை கொண்டாட்டமாக அமைந்துள்ளது.

தீபாவளி ஒளியேற்றுவதற்கு கோடானுகோடி மக்கள் குடும்பங்களாக, நண்பர்களாக கூடி உள்ளனர்" என தெரிவித்துள்ளார்.


ஆனால் இந்தப் பதிவில் அவர் இந்துக்களை குறிப்பிட்டு வாழ்த்த மறந்து விட்டார். இதனால் கடும் விமர்சனங்களுக்கு ஆளானார்.

சி.என்.என். தொலைக்காட்சியின் நாடாளுமன்ற செய்தியாளர் மனு ராஜு" இதை குறிப்பிட்டு பதிவிட்டார். உடனே 2ஆவது முறையாக ட்ரம்ப் டுவிட்டர் பதிவிட்டார். ஆனால் அதிலும் இந்துக்களை அவர் மறந்து விட்டு விட்டார். மீண்டும் அந்த செய்தியாளர் ட்ரம்பின் தவறை சுட்டிக்காட்டினார்.

அதைத் தொடர்ந்து 3 ஆவது முறையாக ட்ரம்ப் டுவிட்டரில் இந்துக்களையும் சேர்த்து பதிவிட்டார். அதில் அவர், "இந்து மக்களின் தீபங்களின் விழாவான தீபாவளி பண்டிகையை கொண்டாடுவது எனக்கு மிகுந்த கௌரவம்.

வெள்ளை மாளிகையின் ரூஸ்வெல்ட் அறை மிக மிக சிறப்பான (இந்து) மக்களை கொண்டுள்ளது" என மேலும் குறிப்பிட்டார். (4-7)

## ...முறையின் எதிரொலி; ...அமைச்சர் இராஜினாமா



போர்நிறுத்தத்தை ஏற்படுத்துவது தொடர்பாக இஸ்ரேல் அமைச்சரவையில் நேற்று முன்தினம் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சரவையின் இவ்வறிவிப்பை தொடர்ந்து எவ்வித தாக்குதல்களும் முன்னெடுக்கப்படாத நிலையில் தெற்கு இஸ்ரேலில் பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் ஆகியன திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## அமெ.மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பதவிக்கு இந்தியப் பெண் தெரிவு

## ட்ரம்ப் அறிவிப்பு





(வோஷிங்டன்)

அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பதவிக்கு இந்திய வம்சாவளி பெண் நியோமி ராவ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் நடந்த தீபாவளி கொண்டாட்டத்தின் போது இதற்கான அறிவிப்பை ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்டார்.

அமெரிக்காவில் பல பெண்களின் பாலியல் புகார்களுக்கு ஆளானவர் நீதிபதி பிரெட் கவனாக் (வயது -53). அங்கு வோஷிங்டன் மாகாணத்தில் கொலம்பியா மாவட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர்.

அவரை உச்ச நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதி ட்ரம்ப் தேர்வு செய்தார். அதற்கு நாடாளுமன்ற செனட் சபை ஒப்புதல் அளித்தது. அதையடுத்து அவர் கடந்த மாதம் 6 ஆம் திகதி உச்சநீதிமன்றம் நீதிபதியாக பதவி ஏற்றார்.

அதைத்தொடர்ந்து அவர் வகித்து வந்த வோஷிங்டன் மாகாணம், கொலம்பியா மாவட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் நீதிபதி பதவி காலியானது. அமெரிக்க உச்ச நீதிமன்றுக்குஅடுத்த இடத்தில் வைத்து பார்க்கப்படுவது இந்த நீதிமன்றம் ஆகும்.

இந்தப் பதவிக்கு இந்திய வம்சாவளி பெண்ணான நியோமி ஜகாங்கிர் ராவ் (45) என்பவரை ஜனாதிபதி ட்ரம்ப் தேர்வு செய்துள்ளார். இது பற்றிய அறிவிப்பை வெள்ளை மாளிகையில் நடந்த தீபாவளி பண்டிகை கொண்டாட்டத்தின்போது அவர் தெரிவித்தார். (4-7)

# மகிந்த உள்ளிட்ட நாம் அனைவரும் எதிரிகளின் சதி வலையில் சிக்கினோம்

## குமார வெல்கம சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தாம் அனைவரும் எதிரிகளின் சதி வலையில் சிக்கித் தவிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழுக்கூட்டத்தில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் வேண்டவே வேண்டாம் எனக் கூறிய போது சிலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செய்த செயலினால் இறுதியில் சில ஆண்டுகளாக கடின உழைப்பில் உருவாக்கிய தாமரை மொட்டு சின்னமும் அழிந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் முடிந்தது. அரசாங்கமும் இல்லை. நாமும் முடிந்தோம். நாம் அனைவரும் எதிரிகளின் சதி வலையில் சிக்கி விட்டோம் என குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சில தலைவர்கள் பொறுப்புச்சொல்ல வேண்டுமென கடும் தொனியில் அனைவரின் மத்தியிலும் அவர்களை வெல்கம திட்டித்தீர்த்துள்ளார். (இ-7)

# ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிர்ச்சி கொடுத்த பேஸ்புக்!

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் பேஸ்புக் பக்கம் நேற்று முன்தினம் மாலை முதல், பேஸ்புக் நிறுவனத்தினால் முடக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தை யார் வேண்டுமானாலும் பார்க்க முடியும். எனினும் தற்போது அதில் புதிய பதிவுகளை பதிவிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கம் ஊடாக பதிவாகும் நேரடி ஒளிபரப்புகள் மற்றும் ஊடக சந்திப்புகள் எதிர்வரும் இரண்டு நாட்களுக்கு பதிவிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (இ-7)

# நாடாளுமன்றத்தில் 113 பெரும்பான்மை எவருக்கும் இல்லையென்கிறார் தயாசிறி



(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் 113 பேர் என்ற பெரும்பான்மை எவருக்கும்கிடையாது என அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் புதிய அரசாங்கம் வரும்வரை தாமே அரசாங்கம் என்றும், பிரதமராகத் தொடர்ந்தும் மகிந்த ராஜபக்ஷவே செயற்படுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கூட்டப்படுவதற்கு முன்னர் இடம்பெறும் கட்சி தலைவர்கள் கூட்டத்தில், நாடாளுமன்றில் முன்னெடுக்கப்படும் விடயங்கள் குறித்து தீர்மானிக்கப்படும். எனினும், நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் கலந்துரையாடாமல் பிரேரணையை கொண்டு வந்தது பிழையான விடயமென தெரிவித்தார். குறிப்பாக ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படாமல், நாடாளுமன்ற நிலையியல் கட்டளையை மீறியே பிரேரணையை கொண்டுவந்தனர் என்றும், 122 பேரின் கையொப்பங்களும் திருட்டுத்தனமாகவே பெறப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சபாநாயகரின் கடிதம் கிடைத்தவுடன் அரசியலமைப்பிற்கமைய ஜனாதிபதி அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வாரென அமைச்சரவைப் பேச்சாளர் மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சபாநாயகரால் பிரதமரை நியமிக்க முடியாது-சமல்



(கொழும்பு)

சபாநாயகரினால் பிரதமர் ஒருவரை நியமிக்க முடியாது எனவும் அவ்வாறு நியமிக்க முடியும் என்றால் அன்று நான் எனக்குத் தேவையான ஒருவரை பிரதமராக நியமித்திருக்க முடிந்திருக்கும் என முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றக் குழு அறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

சபாநாயகர் நடுநிலையாகவும் சுயாதீனமாகவும் செயற்படவேண்டும். தான் எத்தகைய நிலைப்பாட்டுடன் சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்தாலும் எம்.பிக்கள் சொல்வதை செவிமடுத்து முடிவுகள் எடுப்பதே சபாநாயகரின் பொறுப்பாகும்.

ஆனால், சபாநாயகர் கரு ஜெயசூரிய பக்கச்சார்பாக செயற்பட்டதாகவும் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ குற்றம்சாட்டினார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மூளை ஆராய்ச்சி

ஒருத்தர் ரொம்ப கவலைப்பட்டுக் கொண்டு இருந்தார்! 'ஏன் கவலைப்படுகிறீர்கள்' என்று இன்னொருத்தர் கேட்டார்.

'கடன் குடுத்துட்டேன்! அதனால் கவலைப்படுகிறேன்' என்றார் அவர்.

'ஆச்சரியமா இருக்கே!' என்றார் இவர்.

'இதில் என்ன சேர் ஆச்சரியம்... இந்தக் காலத்தில் கடன் குடுத்தவன் தான் கவலைப்பட வேண்டும். வாங்கினவனா கவலைப்படுவான்?' அப்படி என்றார் சர்வ சாதாரணமாக!

இந்த உலகத்தில் எதை வேண்டும் ஆனாலும் கடன் கொடுக்கலாம். ஆனால் ஒரு விடயத்தைக் கடன் கொடுக்கக் கூடாது என்று சொல்லுவார்கள்.

எதைத் தெரியுமா?

புத்தியை! ஆனால்... விஞ்ஞானம் போற வேகத்தைப் பார்த்தால் இனிமேல் அதையும் கடன் கொடுக்கலாம் போல இருக்கு! ஆமாம்!

யாராவது எங்களிடம் வந்து "சேர்! உங்கள் மூளையில் கொஞ்சத் துண்டு எடுத்துக் கொள்ளவா என்று கேட்டால்... ஓ... யெஸ் தாராளமாக எடுத்துக் கொள்ளுங்களன்" என்று சொல்லி விடலாம் போல இருக்கு!

அப்படி யாரும் எங்களிடம் வந்து அவ்வளவு பிரியமாகக் கேட்டுவிட மாட்டாங்க! அது வேறு விடயம்! நான் சொல்ல வந்தது என்னவென்றால் ரஷ்யாவுலே சில வைத்தியர்கள் சேர்ந்து ஒரு ஆராய்ச்சி செய்தார்கள்!

மூளையைப்பற்றி ஒரு ஆராய்ச்சி! எப்படிச் செய்தார்கள் தெரியுமா? முதலில் ஒரு முயல் குட்டியைப் பிடித்தார்கள்! அதற்கு வயது என்ன தெரியுமா? 30 நாள்! மூளையில் cortex என்று ஒரு பகுதி இருக்கு! அதாவது மூளையின் வெளிப்பரப்பு அது! இந்த முயல்குட்டியின் தலையில் சத்திரசிகிச்சை நடந்தது! அத்தோடு மூளையில் இருக்கும் cortex பகுதியைச் சத்திரசிகிச்சை செய்து தனியா எடுத்துட்டாங்க!

அதற்குப்பின்பு அந்த முயல் குட்டியை ஒரு வருடத்துக்கு வழக்கம் போல் எல்லாம் கொடுத்து வளர்த்தார்கள்! அந்த முயலும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் வளர்ந்து வந்தது!

ஒரு வருடம் கழித்து மறுபடியும் ஒரு சத்திரசிகிச்சை! மண்டை ஓட்டைத் திறந்து பார்த்திருந்தார்கள்! பார்த்தால்... ஒரே ஆச்சரியம்!

ஏற்கனவே அந்த cortex பகுதியை அதாவது மூளையின் வெளிப்பகுதியை எடுத்து இருந்தார்கள் அல்லவா! அந்தப் பகுதி மறுபடியும் – முன்னால் இருந்த மாதிரியே வளர்ந்துவிட்டது!

இதிலிருந்து என்ன தெரிகிறது! மூளையிலே ஒரு பகுதியை எடுத்திட்டால் மறுபடியும் அது வளர்ந்திடும் என்று தெரியுது.

இந்த ஆராய்ச்சி எங்களுக்கு ரொம்பவும் உபயோகப்படும்! சில பேருக்கு கடுமையான தலைக்காயம் ஏற்படலாம். அந்தச் சமயத்தில் மூளையில் பாதிப்பு ஏற்படும். அதற்குப் புதிய முறையிலே சிகிச்சைகள் கொடுப்பதற்கு இந்த ஆராய்ச்சி உபயோகமாக இருக்கும்.

மேடையில் பேசிய ஒருவர் ஒரு கதையைச் சொன்னார்.

ஒரு இடத்தில் பல நாட்டு மனிதர்களின் மூளையெல்லாம் போத்தலில் வைத்து விற்றுக்கொண்டு இருந்தார்களாம்! ஒருவர் அங்கே போய் விலை விசாரித்திருக்கிறார்! அவர் எங்கள் ஊர்க்காரர்!

இது இந்த நாட்டு மூளை... இதனுடைய விலை 10 டொலர். இது இந்த நாட்டு மூளை... இதனுடைய விலை 5 டொலர். இப்படிச் சொல்லிக்கொண்டு போனார்களாம்!

ஒரே ஒரு போத்தலில் இருந்த மூளைக்கு மட்டும் விலை 1000 டொலர் என்று போட்டிருந்திருக்கிறது! இது எந்த ஊர் மூளை என்று கேட்டிருந்தார் நம்மூர் ஆள். இது உங்களுடைய ஊர் மூளை தான். அப்படி என்று சொல்லியிருக்கிறார்கள்!

நம்முடைய ஆளுக்கு ஒரே ஆச்சரியம்! "என்னங்க இது எங்கள் ஊர் மூளைக்கு மட்டும் ஏன் இவ்வளவு விலை?" என்று கேட்டிருக்கிறார். அதற்கு கடைக்காரர் சொன்னார் அதிகமாக உபயோகிக்காத மூளை உங்கள் ஊர் மூளை! அதனாலே விலை கூட!" என்றாராம்.

அதனால் எங்கள் மூளைக்கு எங்க போனாலும் மதிப்பு அதிகம் தான். பெருமைப்பட வேண்டிய விடயம்!

மூளையில் கொஞ்சம் போனால் கூட மறுபடியும் வளர்ந்து விடும் என்று வேறே தெரிந்து விட்டோம்! அதற்குப் பிறகு என்ன?

வீட்டில் கோபித்து விட்டு சுவரில் போய் முட்டி இருக்கிறேன் என்று இதுவரைக்கும் சொல்லுவதோடு இருந்தோம்! இனிமேல் தைரியமாகப் போய் நிஜமாகவே முட்டி இருக்கலாம்.

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2018-15.12.2018

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விளம்பி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன், சுக்கிரனோடு இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். இதனால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். புகழ்மிக்கவர்களின் ஒத்துழைப்போடு புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். எந்த லட்சியம் நிறைவேற வேண்டும் என்று நினைத்திருந்தீர்களோ அந்த லட்சியம் இப்பொழுது நிறைவேறும்.

உங்கள் இராசிநாதன் புதன் வக்கிரமாக இருக்கிறாரே என்று நீங்கள் நினைக்க வேண்டாம். கேந்திராதிபத்யம் பெற்ற கிரகங்கள் வக்கிர இயக்கத்தில் இருக்கும்பொழுது மிகுந்த நன்மைகளை வழங்கும் என்பது நியதி. எனவே சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் மிகச்சிறப்பாக இருக்கும். சந்திர-மங்கள யோகத்தோடு மாதம் பிறப்பதால் மங்கல ஓசை மனையில் கேட்கக்கூடிய வாய்ப்புகளும், மற்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான சூழ்நிலைகளும் அமையப் போகிறது.

6இல் சஞ்சரிக்கும் குரு, அஸ்தமனத்தில் இருப்பதால் மிகுந்த நற்பலன்களை வழங்குவார். 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருபகவான் வலிமை இழக்கும் போது, உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகள் பலவிதமான சலுகைகளை வழங்க காத்திருப்பார்கள். பிணிகள் தீரும். பிரச்சினைகள் அகலும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடுதலாக இருக்கும். இனிய வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக்கொள்ள இம்மாதத்தில் உலாவரும் கிரகநிலைகள் சாதகமாக விளங்குகிறது.

2இல் ராகு, 8இல் கேது இருப்பதால் சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம் கூடுதலாக இருக்கிறது. எனவே நாகசாந்திப் பரிகாரங்களை செய்து கொண்டால் எடுக்கும் முயற்சிகளில் இடையூறுகள் ஏற்படாது. எதிரிகள் தொல்லை குறையும். புதிய பாதை புலப்படும். பூமி வாங்கும் யோகம் முதல் அனைத்து யோகங்களும் வந்து சேரும். பொதுவாகவே இல்லத்தில் தினமும் மாலை நேரத்தில் பூஜையறையில் விளக்கேற்றி வைத்து வழிபடுவது நல்லது.

இம்மாதம் கார்த்திகை மாதம் என்பதால் பரணி தீபமும், திருக்கார்த்திகை தீபமும் வருகின்றது. அந்த நாட்களில் இல்லத்துப் படிகளிலும், பூஜையறையிலும் ஒற்றைப் படையில் அகல் விளக்கு ஏற்றிவைத்து வழிபடுவதன் மூலம் வெற்றி வாய்ப்புகளை எளிதில் வரவழைத்துக்கொள்ளலாம்.

## சுப காரியங்கள் கைகூடும் நேரம்!

**புதனின் வக்கிர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், சுகஸ்தானம் எனப்படும் 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் புதன். அவர் பஞ்சம ஸ்தானத்தில் வக்கிரம் பெற்றிருந்தாலும் சரி, பலம் பெற்றிருந்தாலும் சரி நற்பலன்களையே வழங்குவார். பிள்ளைகளுக்கான கல்வி நலன் கருதி எடுத்த முயற்சி, கல்யாண வாய்ப்புக் கருதி எடுத்த முயற்சி போன்றவற்றுக்கு அனுகூலமான பலன் கிடைக்கும். பூர்வீக சொத்துகள் வாங்கும் அமைப்பும், புதிய சொத்துகள் வாங்கும் யோகமும் உருவாகும் தங்கம் வெள்ளி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நவம்பர் 24ஆம் திகதி புதன்




வக்கிர நிவர்த்தியாகிறார். பிறகு டிசெம்பர் 8ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் செல்கிறார். 6இல் புதன் செல்கின்ற பொழுது ஜீவன ஸ்தானம் பலமடைகிறது. எனவே புதிய பொறுப்புகளும், பதவிகளும் கூட கிடைக்கலாம் அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும் நேரமிது.

**சுக்கிரனின் வக்கிர நிவர்த்திக் காலம்!**

உங்கள்இராசிக்கு 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் வக்கிர நிவர்த்தியான பிறகு நற்பலன்களையே வழங்குவார். நவம்பர் 30 ஆம் திகதி சுக்கிரன் வக்கிர நிவர்த்தியாகிறார். எனவே அதன் பிறகு இடமாற்றம், ஊர்மாற்றங்கள் எளிதில் வரலாம். உத்தி யோகத்தில் இருக்கும் சிலருக்கு வெளிநாட்டு யோகம் கைகூடும். வீட்டிற்குத்தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**குருவின் சஞ்சார நிலை!**

மாதத் தொடக்கத்தில் குரு பகவான் உங்கள் ராசிக்கு 6ஆம் இடத்தில் சஞ்சரித்து அஸ்தமனம் பெறுகிறார். சூரிய னோடு இணைந்து வலிமை இழந்தாலும் கூட அதன் பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவதால் பணப்புழக்கம் நன்றாக இருக்கும். மனத்தெளிவோடு காரியங்களைச் செய்வீர்கள். எதிர்பார்த்த வேலை வாய்ப்பு கிடைக்கும். தொழிலில் புதிய முதலீடுகள் செய்ய முன் வருவீர்கள். வாழ்க்கைத் துணை வழியே ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

இம்மாதம் சப்தம ஸ்தானத்தில் இருக்கும் சனி உங்கள் இராசியைப் பார்ப்பதால், சனிக்கிழமை தோறும் விரதம் இருந்து அனுமனை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். புத-சுக்ர யோகமும், சந்திர-மங்கள யோகமும் இருப்பதால் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பாராட்டும், புகழும் கூடும். இனத்தார் பகை மாறும். இல்லத்தாருடன் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும். கணவன்-மனைவிக் குள் ஒற்றுமை பலப்படும். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்பட்டால் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள இயலும். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் பெருகும். பெற்றோர்களின் ஆதரவும் அவர்களால் உதவியும் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதில் இருந்த தாமதங்கள் அகலும். கடன்சுமை குறையப் புதிய வழி பிறக்கும். உங்கள் பெயரில் இடம், பூமி வாங்கும் யோகம் உருவாகும். சக பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். கார்த்திகைத் திருநாளில் விரதமிருந்து கந்தனை வழிபட்டால் சிந்தனைகள் வெற்றி பெறும்.



விளம்பி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் சூரியனுடன் இணைந்து சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. சூரியனுடன் குரு இணைந்திருப்பதால் அதன் வலிமை கொஞ்சம் குறைகிறது. அஸ்தமனத்தில் இருந்து பார்த்தாலும் குருவின் பார்வைக்கு ஓரளவு பலன் உண்டல்லவா? அதனால் தன்னம்பிக்கையோடு செயல்படுவது முக்கியம். குருவை முறையாக வழிபடுவதன் மூலம் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

அஷ்டமத்தில் செவ்வாயும், சந்திரனும் இருப்பதால் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டியது அவசியம். ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம் மட்டுமன்றி வாகன மாற்றமும் உருவாகும் நேரம் இது. வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் முன் சுய ஜாதகத்தை ஒரு முறை ஆராய்ந்து பார்த்துக்கொள்வது நல்லது. இல்லையேல் ராகு-கேது பெயர்ச்சி வரை கொஞ்சம் பொறுமையாக இருக்கலாம்.

தற்சமயம் 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டமாதிபதி 6இல் உலா வரும் பொழுது சங்கடங்கள் குறைவதற்கான வாய்ப்புகள்அதிகம்உண்டு. எதிர்பார்த்த காரியங்கள் நடைபெறுவதில் தாமதம் ஏற்பட்டாலும் எதிர்பாராத விதத்தில் சில நல்ல காரியங்கள் நடைபெறும். ஜீவன ஸ்தானத்தில் சனி சஞ்சரிப்பதால் தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டுப் புதிய பங்குதாரர்களை இணைத்துக்கொள்ள முன்வருவீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். வீடு, மனை வாங்கும்திட்டங்கள் நிறைவேறும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலங்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் வெளிநாட்டுக் கனவு நிறைவேற வாய்ப்பு உருவாகும்.


இம்மாதம் உங்களுக்கு யோகம் தரும் கிரகமாக விளங்கும் செவ்வாய்க்குரிய தெய்வமான முருகப்பெருமானுக்கு உகந்த மாதமாகும். ஆகையால் திருக்கார்த்திகை அன்று முருகனை வழிபட்டால் அனைத்து யோகங்களும் வந்துசேரும்.

**புதனின் வக்கிர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

நவம்பர் 24ஆம் திகதி புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு சகாய ஸ்தானம், விரய ஸ்தானத்திற்கு அதிபதியானவர் புதன். எனவே சுபவிரயங்கள் அதிகரிக்கும். வீட்டை விரிவுபடுத்தி கட்டும் முயற்சி, மூடிக்கிடந்த தொழிலுக்கு திறப்பு விழா நடத்தும் வாய்ப்பு, ஆபரணச்சேர்க்கை போன்றவை நடைபெறும். டிசெம்பர் 8ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் செல்கிறார். பஞ்சம ஸ்தானத்திற்கு புதன் செல்லும் பொழுது பிள்ளைகளின் கல்யாணம் சம்பந்தமாக அல்லது உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். சொத்துகளில் இருந்த வில்லங்கங்கள் அகலும். வங்கி சொத்துகளில் இருந்த பிரச்சினைகள் அகல வழிபிறக்கும்.

**சுக்கிரனின் வக்கிர நிவர்த்தி!**

உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், மாதத்தொடக்கத்தில் வக்கிர நிலையில் இருக்கிறார். நவம்பர் 30ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகி, துலாம் இராசியில் பலம் பெறுகிறார். எனவே




தாய்வழி ஆதரவு கிடைக்கும். பங்காளிப் பகை மாறும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து வரும் தொலைபேசி வழித் தகவல் அனுகூலமானதாக அமையும். பெரிய மனிதர்களின் தொடர்பால் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரலாம்.

**குருவின் சஞ்சார நிலை!**

குரு பகவான் 5ஆம் இடத்தில் சூரியனோடு இணைந்து அஸ்தமனம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், உங்கள் இராசியையும் பார்க்கிறார் 9, 11 ஆகிய இடங்களையும் பார்க்கிறார். எனவே எதிர் பாராத தனலாபம் கிடைக்கலாம். எப்பொழுதோ கொடுத்த தொகை இப்போது வசூலாகும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில் முன்னேற்றம் உண்டு. அடுத்தவர் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் கூடுதலாகவே ஆதாயம் கிடைக்கும். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். இம்மாதம் செவ்வாய்க் கிழமை தோறும் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

சுபச்செலவுகள் அதிகரிக்கும் மாதம் இது. கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கும் முயற்சிக்கு குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பர். மாதத் தொடக்கத்தில் பிள்ளைகளால் கொஞ்சம் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். தாய்வழி ஒத்துழைப்பும் உடன்பிறப்பு களின் ஆதரவும் எதிர்பார்த்த அளவிற்கு கிடைப்பது அரிது. பணிபுரியும் பெண்களுக்கு பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஒரு சிலருக்கு விரும்பத்தகாத இட மாற்றங்கள் வந்துசேரும். வாகனம் வாங்கும் முயற்சி தாமதமாகும். குரு பலம் பெற்று சஞ்சரிக்கும் வரை பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. வியாழன் தோறும் விரதம் இருப்பதன் மூலமும், திசை மாறிய தென்முகக் கடவுளை வழிபடுவதன் மூலமும் நன்மைகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

## பட்டம், பதவிகள் கிடைக்கும் நேரம்!

(தொடரும்)

## "இல்லாத அதிகாரங்களைப் பயன்படுத்தி"

# ஜனாதிபதி கொலைகாரர்களுடன் இணைந்து பயணிக்கிறார்

## முன்னாள் அமைச்சர் ராஜித காட்டம்



(கொழும்பு)

**ஜனாதிபதி அரசமைப்பை மீறிச் செயற்படுவதுடன், கொலைகாரர்களுடன் இணைந்து பயணிக்கின்றார். நாம் அன்று அமைச்சரவையிலிருந்து வெளியேறிய போது, கனவில் கூட நினைக்கவில்லை இவ்வாறு நடக்குமென்று என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

அத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு இல்லாத அதிகாரத்தையும் செயற்படுத்துகிறாரென தெரிவித்துள்ள ராஜித இவ்வாறு செயற்படுவதற்கல்ல நாம் அவரை 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக்கினோம்.

இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்துகிறார் இல்லையென்று நாம் எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில், இன்று தனக்கு இல்லாத அதிகாரத்தையும் அவர் பயன்படுத்துகிறாரென ராஜித தெரிவித்துள்ளார்.

என்ன நடந்தாலும் நாம் நாடாளுமன்றத்தின் ஜனநாயகத்தைஉறுதிசெய்துஅதனை சரியான முறையில் கொண்டு செல்வோம் எனத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழப்பங்களையடுத்து கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் ராஜித மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## கட்டுநாயக்க மீது கரும்புலிகள் தாக்குதல்; கருணா வெளியிட்டுள்ள பரபரப்புத் தகவல்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் அணியினரால் மேற்கொள்ளப்பட்ட கட்டுநாயக்க மீதான தாக்குதலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தொடர்பு இருப்பதாக கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இந்த பரபரப்புத் தகவலை கருணா தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.


Vinayagamoorthy Muralitharan
@ColKaruna

Mr @RW_UNP say he never made deals with LTTE. But what about 2001 Kattunayake attack? That was part of deal between LTTE and some colombo politicians and foreign intelligence. Dont forget i am still alive

இதன் பிரகாரம், "புலிகளுடன் ஒருபோதும் ஒப்பந்தங்களைச் செய்யவில்லை என ரணில் கூறுகிறார். 2001 ஆம் ஆண்டு கட்டுநாயக்க விமான நிலைய தாக்குதல் என்ன? அது விடுதலைப் புலிகளுக்கும் சில கொழும்பு அரசியல்வாதிகளுக்கும் வெளிநாட்டு புலனாய்வுத்துறைக்கும் இடையிலான உடன்படிக்கையின் பாகமாகும்.

நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன்" என்று முரளிதரன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதி அமைச்சரான விநாயகமூர்த்தி முரளிதரன் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தின் சிறப்புத் தளபதியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பசிலின் வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட 4 சந்தேகநபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர். குருசிங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடு வழங்குவதற்காக 2992 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதன் மூலம் அரச நிதி தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக கூறி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அந்த அமைச்சின் முன்னாள் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க, திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க, அந்த திணைக்களத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)



## காணாமற்போன மாணவி கண்டுபிடிப்பு



(ஏறாவூர்)

ஏறாவூர் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பாடசாலைக்குச் சென்றிருந்த நிலையில் காணாமல் போனதாக பொலிஸில் முறையிடப்பட்டிருந்த சிறுமி கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மயிலம்பாவெளி சவுக்கடி கிராமத்தைச் சேர்ந்த 11 வயதான சிறுமி நேற்று முன்தினம் புதன்கிழமை பாடசாலைக்கு சென்றிருந்த நிலையில் பாடசாலைக்கும் செல்லாது வீட்டுக்கும் திரும்பாது காணாமல் போயிருந்தார் என ஏறா வூர் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது.

மயிலம்பாவெளியிலுள்ள பாடசாலையொன்றில் 6ஆம் ஆண்டு கற்கும் குறித்த மாணவி மட்டக்களப்பு நகரில் வைத்து உறவினர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

வழமைபோன்று இந்தச் சிறுமி சவுக்கடியிலுள்ள தனது வீட்டிலிருந்து துவிச்சக்கர வண்டியில் புறப்பட்டு மைலம்பாவெளியிலுள்ள தனது அம்மம்மாவின் வீட்டுக்குச் சென்று அங்கு வைத்து சீருடைகளை மாற்றிக் கொண்டு பாடசாலை செல்வது வழக்கம்.

ஆயினும், நேற்று முன்தினம் அவர் பாடசாலை சென்றிருக்கவில்லை என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிய வந்ததையடுத்து தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

தான் முன்னதாக தனது வீட்டிலிருந்து மயிலம்பா வெளிக்கும் பின்னர் அங்கிருந்து செங்கலடிக்கும் பின்னர் அங்கிருந்து மட்டக்களப்பு நகருக்குச் சென்றதாக சிறுமி உறவினர்களிடம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம்பற்றி பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

## ரூபாயின் பெறுமதி என்றும் இல்லாத அளவு வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கை ரூபாயின் பெறுமதி, என்றும் இல்லாத அளவில் அமெரிக்க டொலருடன் பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை ரூபாய் 177.6267 ஆக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை மத்திய வங்கியால் (14.11.2018) அன்று வெளியிடப்பட்டுள்ள நாணய மாற்று விகிதங்கள் வருமாறு.

அவுஸ்திரேலிய டொலர் கொள்வனவு விலை (ரூபா) 124.2446 விற்பனை விலை (ரூபா) 129.5753, கனடா டொலர் கொள்வனவு விலை (ரூபா) 130.4188 விற்பனை விலை (ரூபா) 135.3579, சீன யுவான், கொள்வனவு விலை (ரூபா) 24.6932 விற்பனை விலை (ரூபா) 25.8880, யூரோ கொள்வனவு விலை (ரூபா) 195.0816 விற்பனை விலை (ரூபா) 202.1122, ஜப்பான் யென் கொள்வனவு விலை (ரூபா) 1.5155 விற்பனை விலை (ரூபா) 1.5722, சிங்கப்பூர் டொலர் கொள்வனவு விலை (ரூபா) 125.3094 விற்பனை விலை (ரூபா) 129.6469, ஸ்ரேலிங் பவுண் கொள்வனவு விலை (ரூபா) 224.8810 விற்பனை விலை (ரூபா) 232.3147, சுவிஸ் பிராங்க் கொள்வனவு விலை (ரூபா) 171.3270 விற்பனை விலை (ரூபா) 177.8683, அமெரிக்க டொலர் கொள்வனவு விலை (ரூபா) 173.7271 விற்பனை விலை (ரூபா) 177.6267, வளைகுடா நாணய மாற்று விகிதங்கள் (முந்தைய நாள் சந்தையின் அடிப்படையில்)


நாடு நாணயம் மதிப்பு (ரூபா)- பஹ்ரைன் தினார் 467.0019, குவைத் தினார் 578.3597, ஓமான் ரியால் 457.2916, கட்டார் ரியால் 48.3495, சவுதி அரேபியா ரியால் 46.9349, ஐக்கிய அரபு இராச்சியம் திர்ஹம் 47.9296. நாடு நாணயம் மதிப்பு (ரூபா), இந்திய ரூபாய் 2.4245 எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

96



ஆனால் இராசசிங்கனின் திட்டமோ ஆங்கிலேய, பிரெஞ்சு ஊடுருவல்களோ வெற்றியளிக்கவில்லை. ஆகாய விமானங்கள் கண்டுபிடிக்கப்படாத இக்காலகட்டத்தில் பாரிய கப்பல் கட்டும் திறனும் மிகுந்த கடல் வலிமையுமே ஐரோப்பிய வல்லரசுகளின் கிழக்கிற்கான வெற்றிகளை இலகுவாக ஈட்டிக் கொடுத்தன.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இயற்கைத் துறைமுகமாகக் காணப்பட்ட திருகோணமலை மேற்படி காலகட்டத்தில் ஐரோப்பியர்களின் கவனத்தை ஈர்த்ததில் வியப்பேதுமில்லை.

இதனால் திருகோணமலைப் பிராந்தியம் பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலிருந்து அதிகமாகவும் துரிதமாகவும் சர்வதேசக் கப்பல்களை கையாளும் ஒரு மையப் பகுதியாகக் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள துறைமுகம் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவில்லை. ஆனால் இது கண்டி இராச்சியத்தை அண்மித்த ஒரு தமிழ்ப் பிரதேசமாக இருந்தது.

அத்தோடு அங்குள்ள செழிப்பான நிலவளம், நீர்வளம் என்பனவற்றால் அதிகளவு நெல் உற்பத்தியை உண்டு பண்ணும் பிரதேசமாகவும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகவும் காணப்பட்டது.

உற்பத்தியுடன் வியாபாரத்திற்கும் தகுந்த இடமாகவும் அது காணப்பட்டது. இதனால் மட்டக்களப்பு டச்சுக்காரரிடம் சென்றடைவதைக் கண்டி மன்னன் இராசசிங்கன் ஒருபோதும் விரும்பியிருக்கமாட்டான்.

அத்தோடு கொழும்பில் டச்சுக்காரர் பலமாக ஆதிக்கம் செலுத்தியதன் விளைவாகவே அவர்கள் கண்டி இராச்சியத்தின் கறுவா விளையும் தென்மேற்குப் பகுதிக்குள் ஊடுருவி அப்பிரதேசங்களைத் தங்கள் ஆதிக்கத்தினுள் கொண்டு வந்து கறுவா வர்த்தகத்தில் ஏகபோக உரிமை பெற்று பெருமளவு வருமானத்தைக் குவித்தனர்.

அதேபோன்று மறு எல்லையில் உள்ள பிரதேசங்கள் குறிப்பாக மட்டக்களப்பு டச்சுக்காரர் வசம் போகுமேயானால் கண்டி இராச்சியத்தின் தென் கிழக்குப் பிரதேசங்களிலும் அவ்வாறான ஆபத்து ஏற்படும் என்பது இராசசிங்கனுக்கு நன்கு தெரிந்திருக்கும்.

அதனால் டச்சுக்காரருக்கு எதிராகப் போரிட கண்டி மன்னன் இராசசிங்கன் மட்டக்களப்பு பிரதேசம் நோக்கியும் அடிக்கடி படையெடுப்புக்களை நடத்தினான்.

> “ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பனியினருக்கும் பிரான்ஸ் வர்த்தகக் கம்பனியினருக்கும் இலங்கை வர்த்தகத்தில்உரிமைகொண் டாட அனுமதி அளித்ததன் மூலம் மீண்டும் அதே தவறை இராசசிங்கன் புரிந்திருக்கின்றான். ஒன்றரை நூற்றாண்டுகள் கழித்து 1796 இல் இலங்கையை டச்சுக் காரரிடமிருந்து கைப்பற்றிய பிரித்தானியர் அவன் பெருமை யோடு கட்டிக்காத்தகண்டிஅரசை 1815 இல் அடியோடு தகர்த்தெறிந்தமைக்கு இராசசிங்கன் தூரநோக்கின்றி விட்ட தவறு காரணமாகின்றது”

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

ஆக மொத்தத்தில் தமிழர் பிரதேசங்களான வடக்கு, வடமேற்குப் பிராந்தியங்களை விட கிழக்குப் பிரதேசமாகிய திருகோணமலையும் மட்டக்களப்பும் மேற்படி காலகட்டத்தில் பல போர்களையும் இழப்புக்களையும் சந்திக்க நேர்ந்தது.

இறுதியாக அறியமுடிவது யாதெனில் இராசசிங்கனின் நீண்டகால ஆட்சியில் அவன் இறுதி வரை கண்டி இராச்சியத்தை டச்சுக்காரரிடம் கையளிக்காது காப்பாற்றியிருக்கிறான் என்பதாகும். அதற்கு கண்டி பிரதேச புவியியற் சூழ்நிலையும் அவனுக்குச் சாதமாக இருந்திருக்கின்றது என்பதும் மறுப்பதற்கில்லை.

ஆனால் அந்நியரான போர்த்துக்கீசரை நாட்டை விட்டு வெளியேறுவதற்கு மேலும் இன்னோர் அந்நியரான டச்சுக்காரரின் உதவியை நாடினான். இறுதியில் டச்சுக்காரருடனான போரில் பல சுதேச மக்களைப் போரில் பலி கொடுத்ததோடு பெரும் பொருளாதார வளங்களையும் அவர்களுக்கு தாரைவார்த்திருக்கின்றான்.

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பனியினருக்கும் பிரான்ஸ் வர்த்தகக் கம்பனியினருக்கும் இலங்கை வர்த்தகத்தில் உரிமை கொண்டாட அனுமதி அளித்ததன் மூலம் மீண்டும் அதே தவறை இராசசிங்கன் புரிந்திருக்கின்றான். ஒன்றரை நூற்றாண்டுகள் கழித்து 1796 இல் இலங்கையை டச்சுக்காரரிடமிருந்து கைப்பற்றிய பிரித்தானியர் அவன் பெருமையோடு கட்டிக்காத்த கண்டி அரசை 1815 இல் அடியோடு தகர்த்தெறிந்தமைக்கு இராசசிங்கன் தூரநோக்கின்றி விட்ட தவறு காரணமாகின்றது.

மேற்படி வரலாற்று அனுபவங்கள் இலங்கையின் இன்றைய அரசியல் தலைவர்களுக்கு வரலாறு கற்றுத் தந்த நல்லதொரு பாடமாக அமையாது போனமை நிச்சயம் மிகவும் துரதிர்ஷ்டமாகும்.

அரசியல் தூரநோக்கின்மையும் பதவிப் பேராசையும் மற்றவர்களின் வாழும் உரிமையை குறுகிய அரசியல் கண்ணோட்டம் காரணமாக கொடுக்க மறுக்கின்ற மனப்பாங்கும் உலகில் எத்தனை அனர்த்தங்களையும் பேரழிவுகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்பது கடந்தகால உலக வரலாறு தரும் பாடங்களாகும்.

இவ்வகையான வரலாற்றுப் பாடங்களை அரசியல் தலைவர்கள் கற்று தெளிவு பெறாத வரை அனர்த்தங்களும் அழிவுகளும் தவிர்க்க முடியாதவாறு நிரந்தரமாகிவிடுகின்றன.

### தமிழ்ச்சமூகமும் புரட்டஸ்தாந்து மதமும்

இதுவரை தமிழ்ப் பிரதேசங்களைப் போர்த்துக்கீசரிடமிருந்து டச்சுக்காரர் கைப்பற்றித் தமது மேலாதிக்கத்தை அப்பிரதேசங்களில் நிறுவினர் என்பது பற்றி ஆராயப்பட்டது.

டச்சுக்காரர் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு முக்கிய காரணமாக வர்த்தகமும் அதன் மூலமாகச் செல்வம் திரட்டும் நோக்கமும் கூடவே தமது புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்பும் எண்ணமும் கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள் என்பது பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

எவ்வாறு டச்சுக்காரர் வர்த்தகத்தின் மூலம் செல்வம் குவித்தார்கள் என்பது பற்றி தெளிவாக நோக்குவதற்கு முதலில் அவர்களது மதப் பரப்பல் நடவடிக்கை பற்றி அறிய வேண்டியுள்ளது.

காரணம் டச்சுக்காரர் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள கரையோரப் பிரதேசங்களை முதலில் கைப்பற்றியிருந்தாலும் 1680 களில் கண்டி மன்னனுடன் ஏற்பட்ட அமைதியான உறவுகளின் பலனாக மேற்படி பிரதேசங்களை அண்டிய உள்ளூர்ப் பகுதிகளையும் தமதாக்கிக் கொள்கின்றதை அறிய முடிகிறது.

(தொடரும்)

# ரஞ்சன் கத்தியைக்காட்டி மிரட்டியதாக முறைப்பாடு



(கொழும்பு)

ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவே நாடாளுமன்றத்துக்கு கத்தியுடன் வருகை தந்தாரென, சபாநாயகரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோவே ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக சபாநாயகரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அருந்திக, நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழப்ப நிலையின் போது, சபாநாயகருக்கு இடது புறமாக நின்று கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சன் ராமநாயக்க, பாலித தெவரப்பெரும ஆகியோர் கத்தியைக் காட்டி சபாநாயகரிடம் வந்தால் கொல்வதாக மிரட்டினர்.

சபாநாயகருக்கு இது தொடர்பில்முறையிட்ட போது, அவர் பொலிஸாருக்கு அறிவிப்பதாக தெரிவித்ததுடன், தானும் நாடாளுமன்றத்திலுள்ள பொலிஸ் உதவி அத்தியட்சகர் ஒருவரிடம் இது தொடர்பில் தெரிவித்ததாகவும் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (இ-7)

# வருடாந்த ஒளிவிழா இன்று


(யாழ்ப்பாணம்)

யாழ்.நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் வருடாந்த ஒளிவிழா இன்று வெள்ளிக்கிழமை கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்பணி ம.பத்திநாதன் கலந்து கொள்வார். (இ-9-136)

# 48 வருடகால வரலாற்றில் ஜோக்கரானார் மகிந்த

## ஜே.வி.பி.தலைவர் அநுரகுமார தெரிவிப்பு

### "ஜனாதிபதித் தேர்தலுக்காக மைத்திரியால் பலி கொடுக்கப்பட்டார்"



(கொழும்பு)

1970ஆம் ஆண்டில், இளம் நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்துக்குள் காலடி எடுத்துவைத்த மகிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்ற வரலாற்றில் முதன் முறையாக ஒரு ஜோக்கராக வெளியேறினாரென்று, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் கௌரவத்தைக் காப்பதற்கு, சபாநாயகர் பெரும் பாடுபட்டார் என்றும் மைத்திரி-மகிந்த தரப்பில், மனசாட்சியுள்ள எம்.பிக்களும், தம்மோடு இணைந்து கொண்டதாகக் கூறியதோடு, தாம், இரண்டு சந்தர்ப்பங்களில், அரச பயங்கரவாதத்தை எதிர்கொண்டதாகவும் ஜனநாயகத்தின் மீது தாக்குதல் நடத்தப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அதற்கெதிராகத் தாங்கள் அணிதிரள்வதாகவும் தெரிவித்தார்.

கட்சிகள் மாத்திரமன்றி, பொதுமக்களும், அரச பயங்கரவாதத்துக்கு இலக்காகாதிருக்க வேண்டுமென்றும் அதனால் தான், மகிந்த ராஜபக்ஷவுக்கும் புதிய அமைச்சரவைக்கும் எதிராக, நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்ததாகவும் கூறிய திஸாநாயக்க, நாடாளுமன்றத்தால், எந்தவொரு சட்டத்தையும் இடைநிறுத்திவிட்டு, நாடாளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமென்றும் தெரிவித்தார்.


மகிந்த - மைத்திரிக்குப் பெரும்பான்மை இருந்திருந்தால், நிலையியற் கட்டளை நிறைவேற்றப்படுவதற்கு எதிராகவோ அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான விவாதத்தை நடத்தவோ நடவடிக்கை எடுத்திருக்கலாமென்றும் சுட்டிக் காட்டிய அநுரகுமார எம்.பி, சதிகாரர்கள், எப்போதுமே சபை நடவடிக்கைகளைக் குழப்பிக்கொண்டே இருப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

சபை அமர்வின் போது, மகிந்த ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும், பொறுமையுடன் நடப்பவற்றைப் பார்த்துக்கொண்டு இருந்திருந்தால், மைத்திரிபால சிறிசேன என்பவர் தொடர்பான விடயங்களை அறிந்து கொண்டிருக்க முடியுமெனக் கூறிய ஜே.வி.பியின் தலைவர், மகிந்த ராஜபக்ஷ, சதிகாரர்களின் வலையில் சிக்குண்டார் என்றும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கில், மகிந்தவை மைத்திரி, பலிகொடுத்து விட்டாரென்று தெரிவித்தார். (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1559

### ராகுலன்

இந்த உலகத்தில பணமில்லாதவனை ஈசியா கண்டுபிடிச்சிடலாம்



நீதி, நேர்மை, நியாயம்னு பேசிட்டிருப்பான்

### சியாம்

பெண்களை நம்பித்தான் நகைக்கடைகள் திறக்கப்படுகின்றன



ஆண்களை நம்பித்தான் அடகுக் கடைகள் திறக்கப்படுகின்றன


### கிருஷ்ணா

பேய்க்கு கால் இல்லைன்னு சொன்னாலும் நம்புறாங்க, பேய் வந்தா கொலுசு சத்தம் கேட்கும்னு சொன்னாலும் நம்புறாங்க... முடியலடா உங்களோட...



### உதய்

என்ன பயங்கரமான யோசனை... சிந்தனை செய்தவரு பெரிய விஞ்ஞானியாத்தான் இருக்கனும்



### ராஜ்

தளராத மனம் கொண்டவனுக்கு முடியாதென்று ஏதும் இல்லை



### கிரண்

இனி எப்படி கொசு வந்து காதுக்குள்ள கத்தும்னு பார்க்கலாம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழினப்படுகொலைக்கு சுயாதீன விசாரணை ஐரோப்பிய பாராளுமன்று முன் கவனயீர்ப்பு







(ஸ்ராஸ்பூர்க்)

ஐரோப்பிய பாராளுமன்றத்தின் முன்பாக தமிழினப் படுகொலைக்கு அனைத்துலக சுயாதீன விசாரணையை வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட நடைபயண கவனயீர்ப்புப் போராட்டத்தை அனைத்துலகம் கவனத்திற்கொள்ள வலியுறுத்தியும் எம் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி வேண்டியும் AJT ஸ்ராஸ்பூர்க் இளையோர்களால் நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சீரற்ற காலநிலையிலும் பல மக்கள் உணர்வுபூர்வமாக இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். அதே வேளை ஐரோப்பிய ஒன்றியத்திடம் தமிழினப்படுகொலைக்கு அனைத்துலக சுயாதீன விசாரணையை வலியுறுத்தியும் காரணமின்றி தமிழ் மக்கள் என்ற காரணத்தினால் பல வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய இலங்கை அரசிற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டியும் ஈழத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நில ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்திற்கும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கும் ஐரோப்பிய ஒன்றியம் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் ஐரோப்பிய பாராளுமன்ற வெளிநாட்டு வெளி விவகார ஆணைக்குழு தலைவருடனும் தெற்காசிய விவகாரக் குழுத் தலைவியுடன் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது முக்கியமாக அனைத்துலக சுயாதீன விசாரணையே தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தரும் எனவும் தமிழ் மக்களின் நிரந்தரத் தீர்வு தமிழீழம் தான் என வலியுறுத்தப்பட்டது.

இப்போராட்டத்தை ஐரோப்பிய பாராளுமன்ற ஊடகங்கள் பல கவனத்தில் கொண்டதுடன். ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கவனயீர்ப்பை தமது கவனத்தில் கொண்டு தாங்களும் குரல் கொடுப்பதாக உறுதியளித்துச் சென்றனர். (இ-7)

# காமினி செனரத்துக்கு எதிரான வழக்கு மீண்டும் இன்று விசாரணைக்கு வருகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானி காமினி செனரத் உள்ளிட்ட பிரதிவாதிகளின் வழக்கு நேற்று கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

இது தொடர்பான மனு சம்பத் அபேகோன் (தலைவர்), சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

வழக்கின் நான்காவது சாட்சியாளரான ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்திதஸ்ஸவிடம் நேற்று சாட்சி விசாரணை இடம்பெற்றது.

இதனையடுத்து மேலதிக சாட்சி விசாரணைகள் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி வரையான காலத்தில் லிட்ரோ ஹாஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான 500 மில்லியன் ரூபாய் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதால் பொதுச் சொத்துக்கள் சட்டம் மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் பிரதிவாதிகள் குற்றமிழைத்துள்ளதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதியின் செயலை ஏற்றுக்கொள்ளாத மகிந்த

## ருவான் விஜேவர்த்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இனிவரும் காலங்களில் நன்றாகச் சிந்தித்து வாக்களிக்குமாறு முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட ருவான்,

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சம்பவம் கடும் மன வேதனையை ஏற்படுத்துகின்றது.

எனது நாடு பற்றி பாரியளவு மன வேதனையளிக்கின்றது.

ஒரு பக்கம் பார்க்கும் போது இவ்வாறான தலைவர்களா? நாடாளுமன்றிற்கு தெரிவாகியுள்ளனர் என எண்ணத் தோன்றுகின்றது.

நாடாளுமன்றில் இடம்பெற்ற சம்பவம் அதிருப்தியளிக்கின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியல் அமைப்பிற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் நீதி வேண்டி நாம் உச்ச நீதிமன்றம் சென்றோம்.

தற்பொழுது ஜனாதிபதியின் இந்த செயற்பாட்டை மகிந்த ராஜபக்ஷவும் ஏற்றுக்கொள்ளவில்லை என ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 200 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 120 | 130 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 120 | 120 | 250 |
| தக்காளி | 300 | 200 | 360 | 150 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 140 | 180 | 160 | 120 | 200 |
| கரட் | 180 | 200 | 220 | 140 | 400 |
| பூசணி | 80 | 50 | 60 | 30 | 80 |
| புடோல் | 180 | 120 | 120 | 100 | 160 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 50 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 140 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 130 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 400 | 250 | 300 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 120 | 120 | 130 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 350 | 300 | 240 | 250 | 250 |
| லீக்ஸ் | 140 | 140 | 160 | 110 | 240 |
| பீற்றூட் | 140 | 160 | 150 | 60 | 200 |
| கறிமிளகாய் | 200 | 180 | 240 | 180 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300 | 160 | 300 |
| போஞ்சி | 300 | 300 | 280 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 160 | 180 | — | 190 | 280 |
| கீரை - 1பிடி | 80 | 50 | 40 | 30 | 80 |
| தேசிக்காய் | 500 | 400 | 450 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 180 | 240 | — | 240 |
| வெங்காயப்பூ | — | — | — | 120 | — |
| முள்ளங்கி | 80 | 120 | — | 30 | 160 |
| பொன்னாங்காணி | 60 | 40 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 45 | 20 | 15 | 25 |
| ஈரப்பலா | 60 | 100 | 60 | 130 | 120 |

# செய்தித்துளிகள்

## மகளின் தாக்குதலில் தந்தை பலி!

(கொழும்பு)

அவிஸாவளை, சமருகம பிரதேசத்தில் மகள் தந்தையை பொல்லால் தாக்கி கொலை செய்துள்ளார்.

இருவருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு மோதலாக மாறியதை அடுத்து மகள், தந்தை மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவிஸாவளை சமருகம பிரதேசத்தைச் சேந்த 54 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சந்தேக நபரான மகள் கைது செய்யப்பட்டுள்ளதுடன். பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

## மகிந்தவுடன் டில்ஷான் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரருமான டில்ஷான் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதற்கு முன்னர் அவர் மகிந்த தலைமையிலான பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்டு தமக்கான உறுப்புரிமையை கட்சியின் தலைமையகத்தில் வைத்து பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து அவருக்கு ஆதரவு வழங்குவதாக டில்ஷான் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஹெரோயினுடன் சூட்டி கைது

பிரபல போதைப்பொருள் வியாபாரி சூட்டி ஹெரோயின் போதைப்பொருளுடன் பொறளை டி 20 தோட்டத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொறளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 4.20 மணியளவில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அவரிடமிருந்து 5 கிராம் 650 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயினையும் பொலிஸார் கைப்பற்றியதுடன் அவரை மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி!

(தம்புள்ளை)

தம்புள்ளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஜயமுனிபுர பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை அயல் வீட்டிற்கு மின் இணைப்பை ஏற்படுத்த முற்பட்ட சந்தர்ப்பத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மின்சாரத் தாக்குதலுக்குள்ளான குறித்த இளைஞர் சிகிச்சைகளுக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

## கம்பத்தில் மோதிய மோ.சைக்கிள்

### ஒருவர் உயிரிழப்பு

(கலேவெல)

கலேவெல பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்பகஹகமுவல -மொரகொல்ல வீதியூடாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதியமையினாலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளின் சாரதி படுகாயமடைந்த நிலையில் கலேவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் 44 வயதுடைய பம்பரகஷ்வாவ பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன், அவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கலேவெல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# கடவுளை காட்டுங்கள்!



நாமதேவருடைய குருகுலத்தில் பயின்ற மாணவர்களில் சைதன்யனும் ஒருவன். மற்ற மாணவர்களைக் காட்டிலும் மிகவும் புத்திசாலியாக இருந்த சைதன்யனை குருவுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆகவே, தனக்குத் தெரிந்த அனைத்தையும் நாமதேவர் சைதன்யனுக்குக் கற்றுக் கொடுத்தார். குருகுலத்தில் பல ஆண்டுகள் பயின்ற சைதன்யனுக்கு வயது பதினெட்டு ஆயிற்று.

ஒரு நாள் நாமதேவர் அவனை அழைத்து, "மகனே நீ கற்றுக்கொள்ள வேண்டிய அனைத்தையும் தெரிந்து கொண்டுவிட்டாய். இத்துடன் குருகுலவாசம் உனக்குப் போதும். நீ இனி உன் பெற்றோரிடம் சென்று அவர்களுக்குத் தொண்டு செய்வாய். கடவுள் எப்போதும் உனக்குத் துணை இருப்பார்" என்று வாழ்த்தினார்.

தனது குருவை தரையில் விழுந்து வணங்கிய சைதன்யன் அவரிடம் பணிவாக, "குருவே எனக்கு எவ்வளவோ பாடங்கள் கற்றுக் கொடுத்தீர்கள். ஆனால், எந்தக் கடவுளைப் பற்றி இப்பொழுது குறிப்பிட்டீர்களோ அவரை மட்டும் எனக்குக் காட்டவில்லையே! கண்ணால் காண முடியாத கடவுள் எவ்வாறு எனக்குத் துணை இருப்பார்?" என்று வினவினான்.

"சைதன்யா உன்னுடைய சந்தேகத்திற்கு பிறகு ஒரு நாள் விடை அளிக்கிறேன். நீ இப்போது வடக்குத் திசையில் உள்ள காட்டின் வழியே சுசந்த நகர் எனும் நகரத்தைத் தாண்டி பவானிபுரத்திற்குச் சென்று அங்குள்ள என் சகோதரனைச் சந்தித்து அவனுடைய சேமலாபங்களை விசாரித்துக் கொண்டு வா?" என்றார்.

"அப்படியே செய்கிறேன் குருவே", என்று பதிலளித்தான் சைதன்யன். குருவின் மனைவி கொடுத்த உணவுப் பொட்டலங்களுடன் மறுநாள் காலையில் கிளம்பினான் சைதன்யன்.

நண்பகல் நேரம் காட்டு வழியில் பாதியைக் கடந்து விட்டான். அப்போது அவனுக்கு மிகவும் தாகம் உண்டாயிற்று. இந்தக் காட்டில் குடிக்கத் தண்ணீர் எங்கே கிடைக்கும் என்று தேடிய அவன் கண்களில் ஒரு வயதான பார்வையற்ற மனிதர் தென்பட்டார். அவர் செடியிலுள்ள இலைகளைக் கைகளால் தடவிப் பார்த்துப் பின் அதை முகர்ந்து பார்த்து சில இலைகளை மட்டும் பையினுள் போட்டுக்கொண்டார்.

"ஐயா, தாங்கள் எதைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் இந்தக் காட்டில் வசிப்பவன். நான் மூலிகைகளை சேகரித்து பிறருக்கு வழங்குகிறேன். எனக்கு கண் தெரியாது என்பதால் முகர்ந்து பார்த்து மூலிகைகளைக் கண்டுபிடிக்கிறேன்" என்றார். "இப்போது நீங்கள் பறித்துக் கொண்டிருப்பது என்ன மூலிகை?" என்றான்.

"இது பாம்புக் கடிக்கான மூலிகை. இந்த மூலிகையின் சாறை பாம்பு கடித்தவன் வாயில் விட்டால் விசம் இறங்கிவிடும். நீ காட்டு வழியில் சுற்றுகிறாயே... இந்த மூலிகையை கொஞ்சம் வைத்துக்கொள்" என்று சில இலைகளைக் கொடுத்தார்.

அவற்றைப் பத்திரமாக வைத்துக்கொண்ட சைதன்யன், "ஐயா, குடிக்க தண்ணீர் கிடைக்குமா?" என்று கேட்டான்.

"அருகில் ஒரு கிணறு உள்ளது!" என்று கிணறு இருக்கும் இடத்தைக் காட்டினார்.

அந்தக் கிணற்றை அடைந்து தாகம் தீரத் தண்ணீர் குடித்தபின், ஒரு மரத்தடியில் அமர்ந்து உணவு உண்டுவிட்டு அப்படியே உறங்கிவிட்டான் சைதன்யன். அவன் மீது ஏதோ இடித்துவிட்டு ஓடுவது தெரிந்து திடீரெனக் கண் விழித்த சைதன்யன் கண்களில் வேகமாக ஓடும் ஒரு முயல் தென்பட்டது.

திடீரென மரத்தில் ஏதோ சத்தம் கேட்க, நிமிர்ந்து பார்த்தால் ஒரு பெரிய கிளை ஒடிந்து கீழே விழ இருந்தது. உடனே நகர்ந்து விட தற்செயலாக உயிர் தப்பினான் சைதன்யன்.

அங்கிருந்து பயணத்தைத் தொடர்ந்த சைதன்யன் இருட்டும் நேரத்தில் சுசாந்த நகரை அடைந்தான். அங்கு பசியால் வாடிய ஒரு பிச்சைக்கார குடும்பத்திற்கு எஞ்சிய உணவுகளை கொடுத்துவிட்டு அன்று இரவு ஒரு சத்திரத்தில் தங்கினான்.

நடு இரவில் ஏதோ சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்த சைதன்யன் தன் அருகில் உறங்கிக் கொண்டிருந்த மனிதனின் வாயில் நுரைதள்ள முணகிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

கொஞ்சத் தூரத்தில் ஒரு விசப்பாம்பு ஓடிக்கொண்டிருப்பதை பார்த்தான். அந்த மனிதனின் அபாய நிலையை உணர்ந்த சைதன்யன் உடனே தன்னிடமிருந்த விசக்கடி மூலிகைகளை எடுத்து சாறு பிழிந்து அந்த மனிதனின் வாயில் விட்டான். சற்று நேரத்திற்கெல்லாம் அவன் சாதாரண நிலையை அடைந்தான்.

அந்த நபர் யாருமல்ல! குடிமக்களின் குறைகளை அறிய மாறு வேடம் பூண்டு இரவில் திரிந்த அந்த நாட்டு அமைச்சர்.

சைதன்யனுக்குத் தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்த அமைச்சர், "நீ என் உயிரைக் காப்பாற்றினாய். அதற்கு செய் நன்றியாக உனக்கு மன்னரிடம் வேலை வாங்கித் தருகிறேன்" என்றார்.

"மிகவும் நன்றி ஐயா. ஆனால், நான் முக்கிய அலுவலாக பவானிபுரம் சென்று கொண்டிருக்கிறேன். சில தினங்கள் கழித்து உங்களைச் சந்திக்கிறேன்" என்று கூறி அமைச்சரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டான்.

மறுநாள் காலை பவானிபுரத்தை அடைந்து குருவின் சகோதரரைச் சந்தித்து சேமலாபங்களை விசாரித்து அறிந்து, பிறகு தன் குருவிடம் திரும்பினான். தான் சென்று வந்த விபரங்களையும் அவரது சகோதரனைப் பற்றியும் விளக்கிக் கூறினான்.

"மகனே, நினைவிருக்கிறதா? கண்ணால் காண முடியாத கடவுள் எங்கே என்று வினவினாய் அல்லவா? அந்த சந்தேகத்திற்கு நான் ஏதும் விளக்கம் கூறாமல் உனக்கு விடை கிடைத்து விட்டது. கடவுளைப் பார்த்து விட்டாய் அல்லவா?" என்றார்.

"நானா! நான் எங்கே கடவுளைப் பார்த்தேன்? பார்க்கவில்லையே!" என்றான் ஆச்சரியத்துடன் சைதன்யன்.

"மகனே கடவுள் எப்போதும் எல்லா இடங்களிலும் காணப்படுகிறார். ஆனால், ஒரே உருவத்தில் அவர் உனக்குத் தோன்றவில்லை" என்றார்.

"எந்தக் கண் தெரியாத முதியவர் உனக்கு பாம்பின் விசக்கடிக்கான மூலிகை தந்தாரோ அவர் கடவுள். காட்டிலும் கூட கிணற்றின் தேவை ஏற்படும் என்று எண்ணி, யாரோ ஒருவன் கிணறு தோண்டி இருந்தானே, அவனும் கடவுள் தான். உன்னுடைய உயிரைக்காப்பற்றிய முயலும் கடவுள் தான். எந்த அமைச்சரை பாம்புக் கடியிலிருந்து நீ பிழைக்க வைத்தாயோ, அவருக்கு நீ கடவுள். இவ்வளவு உருவங்களில் கடவுளைக் கண்ட பிறகுமா கடவுளை நான் காணவில்லை என்று நீ கூறுகிறாய்?" என்றார்.

குருவின் வார்த்தைகளில் இருந்த உண்மையை அறிந்து உணர்ந்ததும் சைதன்யனுக்கு ஞானோதயம் உண்டாயிற்று. தனக்கு ஞானோதயத்தை ஏற்படுத்திய குருவை விழுந்து வணங்கி விட்டு, அவரிடமிருந்து விடை பெற்றான்.

இதற்குப் பிறகு சைதன்யன் தன் பெற்றோரை அழைத்துக் கொண்டு சுசாந்த நகரை அடைந்து அமைச்சரைச் சந்தித்தான். அமைச்சரின் உதவியால் அவனுக்கு அரசாங்கத்தில் நல்ல வேலையும் கிடைத்தது.

## சுட்டி ஸ்ரார் நியூஸ்

### பூனையைப் போல நரி!



வட ஆபிரிக்காவின் சகாரா பாலைவனப் பகுதிகளில் காணப்படும் சிறிய வகை நரி, ஃபென்னெக் (Fennec Fox). தோற்றத்தில் பூனையைப்போலவே இருக்கும் இது, அதிக வெப்பத்தைத் தாங்கும் உடல் அமைப்புகொண்டது. கூட்டமாக வாழும் இவை, ஊர்வன, எலி, பூச்சி, முட்டை போன்றவற்றை உணவாக உட்கொள்ளும். தண்ணீர் குடிக்காமலேயே நீண்ட நாள் சமாளிக்கும் திறனுள்ளவை.

இதன் இனப்பெருக்க காலம் 50 நாட்கள். ஒரு தடவைக்கு 2 முதல் 5 குட்டிகள் வரை ஈனும்.

சராசரி ஆயுள் காலம் 10 ஆண்டுகள். கழுகு, ஆந்தை, குள்ளநரி ஆகியவற்றால் இவை வேட்டையாடப்படுவதுண்டு.

## தகவல் களஞ்சியம்

- உடலில் இரத்தம் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை கண்டுபிடித்தவர் வில்லி ஹார்வி.
- இந்தியாவில் ஹெலிகொப்டர் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1985.
- அண்டார்டிகாவில் உள்ள ஒரு எரிமலை எரோபஸ்.
- கும்பக்கரை அருவி தேனி மாவட்டத்தில் உள்ளது.
- பாகிஸ்தானின் தேசிய மலர் மல்லிகை.
- குளிர்சாதனப் பெட்டியான (பிரிஜ்ஜை)கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் ஹாரிசன்.
- குதிரைகள் அதன் கண்களால் இரு வேறு காட்சிகளை காண முடியும்.
- ஷட்டில்காக் பந்து வாத்து இறகு கொண்டு தயாரிக்கப்படுகிறது.

வாழ்க்கை ஒரு சினிமா சினிமா
மூன்று மணிநேரம் தான்.
- கவிப்பேரரசு வைரமுத்து

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சண்டைக்காட்சிகள் நிறைந்த 'பாராளுமன்றம்' திரைப்படம்

சர்வதேச நாடுகளுக்கு அரியதோர் சந்தர்ப்பம்; வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு கிடைத்தற்கரியபேறு; இலங்கை மக்களுக்குப் பாகுபலி படம் போன்ற காட்சி.

இதோ! இலங்கைப் பாராளுமன்றம் எனும் சண்டைக்காட்சிகள், திகில் சம்பவங்கள் நிறைந்த அற்புதமான திரைப்படம் வெளியாகி இருக்கிறது.

திரைவிமர்சனத்தில் வில்லன் யார், கதாநாயகன் யார் என்பது தெரியவில்லை.

பாராளுமன்றத் திரைப்படத்தில் முகம் காட்டாத எவரோ படத்தை தயாரித்து நெறியாள்கை செய்து நம் நாட்டுக்குத் தந்துள்ளார் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

யார் அந்த தயாரிப்பாளர். ராஜமௌலியா? மணிரத்தினமா? இல்லை இல்லை இது சிங்களத் தயாரிப்பாளர் என்ற தகவல் மட்டுமே உள்ளது.

இளமை, முதுமை இரண்டுக்கும் இடைப்பட்டமை என 225 நடிகர்கள் ஒன்றுசேர்ந்து நடிக்கின்ற பாராளுமன்றம் எனும் திரைப்படம் முன்பு எப்போதும் இல்லாதவாறு இரசிகர்களைக் கவர்ந்துள்ளது.

படத்தின் உச்சகட்டத்தை காண அமெரிக்க நாட்டுத்தூதுவர் கூட அந்தப் படத்தை பார்த்து இரசித்ததாகத் தகவல்.

ஐயகோ! யார் அங்கே? ஒரு முதுமையான பாத்திரம். குறைந்தது 86 வயது இருக்கும். தட்டுப்பட்டால் தடக்குப்பட்டால் சங்காரம் நடந்ததாகிவிடும் என்று கூறுமளவில் அந்த முதுமை நிறைந்த நடிகரும் தன் பங்குக்கு நன்றாகவே நடிக்கின்றார்.

ஆனால் திரைவிமர்சனம் எழுதுகின்றவர்கள் அந்த முதுமையானவர்தான் பாராளுமன்றப் படத்தில் வில்லன் பாத்திரமாம்.

ஆளுந்தரப்பு கதாநாயகன் என்றால், எதிர்க்கட்சித் தலைவர் வில்லன் பாத்திரமல்லவா. அப்படியானால் வில்லன் பாத்திரம் அமைதியாக இருக்கிறதே எப்படிப்படம் இவ்வளவு இரசனையோடும் சண்டைக்காட்சிகளோடும் வெளிவந்துள்ளது என்ற கேள்வி மகா இரசிகர்கள் கூட்டத்திடம் எழவே செய்கிறது.

அட! படத்தை நன்கு பாருங்கள். ஆட்சிப் பீடத்தில் இரு தரப்பு. எதிர்க்கட்சி மட்டுமே ஒரு தரப்பு அதுவும் ஆளுந்தரப்பு ஒன்றுடன் இரண்டறக் கலந்துவிட்டதாம்.

பரவாயில்லை, படம் தொடர்ந்து ஓடினால் சண்டைக்காட்சிக்குக் குறையிருக்காது. இப்போது சண்டைக்காட்சியில் கத்தி மட்டுமே ஆயுதம்.

இனித்தான் கடாரம், மண்வெட்டி, கோடரி போன்ற ஆயுதங்கள் பிரயோகிக்கப்படுமாக்கும்.

நமக்கென்ன; நெருக்குண்டு, தள்ளுண்டு ரிக்கெற் எடுத்து படம் பார்க்கின்ற கஷ்ரம் இல்லாமல் வீட்டில் இருந்தபடியே பாராளுமன்றப் படத்தை பார்க்க முடிகிறது.

இப்படியொரு படத்தை இந்த உலகில் எந்த நாடும் தயாரித்து வெளியிட்டதில்லை என்பது தான் இலங்கைப் பாராளுமன்றம் எனும் திரைப்படத்துக்கான சர்வதேச விமர்சனமாகும். அப்ப எங்களுக்கும் பெருமைதானே.

# குடியுரிமை பறிபோய்விடும் அச்சத்தில் கோத்தபாயவும் பசிலும் மாயம்

## சம்பிக்க ரணவக்க கேள்விக்கணை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் இப்பொழுது எங்கே இருக்கின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்குலக நாடுகளின் கைப்பாவையாக எமது தரப்பு செயற்படுவதாக மகிந்த ராஜபக்ஷ தரப்பு குற்றம் சுமத்தி வருகின்றது.

உண்மையில் யார் மேற்குலக நாடுகளின் அடிவருடிகள் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் நாடாளுமன்றின் செயற்பாடுகளை பார்வையிட வருவது வழமையானவிடயம்

வரவு-செலவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு இராஜதந்திரிகள் பார்வையிட வருவது வழமையானது.

பகலில் இராஜதந்திரிகளை திட்டித் தீர்க்கும் மகிந்த தரப்பின் சிலர் இரவில் இராஜதந்திரிகளின் கொல்லை புறத்திற்கு சென்று வருவது அனைவரும் அறிந்த விடயம்.

இன்று மேற்குலக சதித் திட்டம் என குற்றம் சுமத்துபவரின் குடும்பமும் அவுஸதிரேலியாவில் உள்ளது.

மேற்குலக நாடுகளின் சதி பற்றி பேசும் மகிந்த ராஜபக்ஷ தனது சகோதரர்கள் எந்த நாட்டுப் பிரஜைகள் என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக இந்த ராஜதுரோக செயற்பாடுகளுடன் தொடர்பு பட்டமை தெரியவந்தால் தமது குடியுரிமை பறிபோய் விடும் என்ற காரணத்தினால தான் கோத்தபாயவும் பசிலும் தற்பொழுது அமைதி காத்து வருவதுடன், காணாமல் போயுள்ளனர் என சம்பிக்க தெரிவித்தார். (இ-7)

# ஜனநாயகத்துக்கு மோசமான நாள்

## ஜேர்மனி கண்டனம்

இன்றைய நாள் (நேற்று) இலங்கையில் ஜனநாயகத்திற்கு மிகமோசமான நாள் என ஜேர்மனியின் இலங்கைக்கான தூதுவர் ஜோர்ன ரொஹ்டே தெரிவித்துள்ளார். டுவிட்டரில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சம்பவங்கள் குறித்தே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

இன்றைய நாள்(நேற்றைய) இலங்கையின் ஜனநாயகத்திற்கு மிக மோசமான நாள் என குறிப்பிட்டுள்ள அவர இலங்கைக்கு என நீண்ட கால ஜனநாயக பாரம்பரியம் உள் ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.(ம)

# ஹெரோயின் வைத்திருந்த 18 வயது மாணவனுக்கு சிறை

## யாழ்.நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த பாடசாலை மாணவனுக்கு ஒரு மாத கால சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் தீர்ப்பளித்தார்.

ஒரு மாத கால சிறைத் தண்டனையை அனுபவிக்க மாணவனை சான்று பெற்ற சீர்திருத்தப் பாடசாலையில் சேர்ப்பிக்குமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

ஹெரோயின் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாண நகர் பகுதியில் 18 வயதுடைய மாணவன் ஒருவர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 10 மில்லிக்கிராம் உயிர்க்கொல்லி ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

அவர் யாழில் உள்ள பிரபல பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் என பொலிஸார் மன்றுக்குத் தெரிவித்தனர். இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

நீதிமன்றில் மாணவன் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனால் அவருக்கு ஒரு மாதகால சிறைத் தண்டனையை விதித்த யாழ்ப்பாணம் நீதிவான், மாணவனை அச்சுவேலி சீர்திருத்தப் பாடசாலையில் சேர்ப்பித்து தண்டனைக் காலத்தைக் கழிக்க அனுமதியளித்தார்.(ம-9,101)

# பாராளுமன்றில் கைகலப்பு விமல் வீரவன்ச வெளிநடப்பு

(கொழும்பு)

பாராளுமன்றில் நேற்றுக் காலை சபை நடவடிக்கைகள் ஆரம்பமானபோது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விசேட உரையொன்றை ஆற்றியிருந்தார்.

பாராளுமன்றின் சபை நடவடிக்கையின்போது மகிந்த ராஜபக்ஷ நிகழ்த்திய விசேட உரையின் பின்னர் லக்ஷ்மன் கிரியெல்ல மகிந்தவின் உரையில் கூறப்பட்ட விடயங்கள உண்மையல்ல என்று கூறி மீண்டுமொரு வாய்மூல நம்பிக்கையில்லா வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என சபாநாயகரிடம் கேட்டுக் கொண்டார்.

லக்ஷ்மன் கிரியெல்லவின் கோரிக்கைக்கு சபையின் அனுமதியை கேட்க பாராளுமன்றில் அமளிதுமளி ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து கைகலப்புகள் ஏற்படவே கண்டி எம்.பி. திலுனு அமுனுகம சபாநாயகரின் ஒலிவாங்கியை முறித்த நிலையில் கையில் காயமடைந்து இரத்தம் சிந்த சபாபீடத்திலிருந்து வெளியேறினார்.

அத்தோடு கைகலப்புகளுக்கு மத்தியில் அமைச்சர் விமல் வீரவன்ச சபையை விட்டு இடைநடுவே வெளிநடப்பு செய்தார். (இ-7)



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## யாதொன்றுக்கும் காரண விளக்கம் (Rational Mind) கேட்கும் மனதிற்கு அப்பால்

சாதாரணமாக நோக்கமுள்ள ஒன்றை உபயோகமாயுள்ள ஒன்றை காரண விளக்கத்தோடு கூடிய ஒன்றை மாத்திரமே நீங்கள் செய்கிறீகள். நீங்கள் காணும் ஒவ்வொன்றையும் காரண விளக்கம் கேட்கும் மனதின் மூலம் நீங்கள் காண்கிறீர்கள்.

ஆனால் உள்ளுணர்வு மறைந்திருக்கும் ஒன்றைக் கண்டுபிடித்தல் (Discovery) புதிய அறிவு இவையெல்லாம் காரண விளக்கம் கேட்கும் மனதிற்கும் அப்பாற்பட்டவை. உண்மையும் (Truth) காரணததிறகு அப்பாற்பட்டதே.

காரண விளக்கம் கேட்கும் மனம் ரயில் தண்டவாளப்பாதை போன்றது. உண்மைக்கு எந்தத் தடமும் தேவையில்லை.உண்மையால் பலூன் போன்று எங்கு வேண்டுமானாலும் மிதக்க முடியும்.

சமுதாயத்தில் கிளர்ச்சி செய்வதற்கென்றே சிலர் காரண விளக்கம் கேட்கும் மனதை விட்டு வெளி வருகிறார்கள். அவர்கள் சமுதாயச் சட்டத்தை முறிக்க விரும்புகிறாாகள. ஆனால அது ஆணவததால-கோபததால வெறுபபால களாசசி செயயும குணததால மறறவாகளின கவனத்தை தங்கள் பக்கம் திருப்புவதற்காகச் செய்யப்படுவது இது காரண விளக்கம் கேட்கும் மனதை விட்டு வெளி வருவதாகாது (அவர்கள் அப்படியென்று எண்ணலாம்)

நோக்கமற்ற ஒன்றைச் செய்யும் போது காரண விளக்கம் கேட்கும் மனதை விட்டு வெளி வருகிறோம்.யாதொரு பயனுமில்லாத போது அச்செயல் ஒரு விளையாட்டாகிறது. வாழ்க்கை லேசாகிறது.(தொடரும்)

# இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

யோகிகளுக்கு உள்ளே தசநாதங்கள் கேட்கும். அதன் முடிவில் கண்டாமணி நாதம் கேட்கும். அது ஓங்கார ஓசை. அதை வெளி முகத்தில் தெரிவிப்பது தான் கோயிலில் ஒலிக்கும் மணியோசை.

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

"காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக் கலாமே தவிர, நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சிவிடக் கூடாது"
-தமிழகக் கவிஞர் அறிவுமதி

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 5 மணி வரை யாழ. பிரதேசத்தில யாழ் பிரதேசத்தில் வலந்தலை, காரைநகர், சிவகாமி அம்மன கோவிலடி, ஆலடி, வியாவில் கருங்காலி, ஊரி, களபூமி, தோப்புக்காடு, காரைநகர் இறங்குதுறை, காரைநகர கடறபடைமுகாம் ஆகிய இடங்களிலும கிளிநொச்சி பிரதேசத்தில தேராங்கண்டல், ஆலங்குளம், 65 Infantry Army Camp, 22 SLLI Army Camp ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில இரட்டை பெரிய குளத்திலிருநது பூ ஓயா வரை, பணடாரிக்குளம், மதவு வைத்த குளம், தோணிக்கல் கிராமம், குட்செட்வீதி, பூந்தோட்டம் கிராமம், Refco North, இராணுவமுகாம் இரட்டை பெரியகுளம். ஆண்டிய புளியங்குளம், ஆண்டிய புளியங் குளம் இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில நானாட்டான் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (9)

# அவுஸ்திரேலியத் தொடரை வெல்ல வேண்டுமென்றால் ரோகித் சர்மாவை அணியில் இணைக்க வேண்டும்

## கங்குலி அறிவுரை





இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து மூன்று 20 ஓவர், 4 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.

20 ஓவர் தொடர் 21ஆம் திகதி தொடங்குகிறது. முதல் டெஸ்ட் போட்டி டிசெம்பர் 6ஆம் திகதி அடிலெய்டுவில் தொடங்குகிறது. 70 ஆண்டுகளில் இந்தியா- அவுஸ்திரேலியா கிரிக்கெட் வரலாற்றில் இந்திய அணி இதுவரை அவுஸ்திரேலிய மண்ணில் தொடரை வென்றது இல்லை.

2003-04ஆம் ஆண்டு கங்குலி தலைமையிலான அணி 1-1 என்ற கணக்கில் சமநிலை செய்ததே அவுஸ்திரேலியாவில் சிறந்த நிலையாகும்.

இந்த சுற்றுப்பயணத்தில்தொடரை வெல்ல வாய்ப்பு இருந்தது. ஆனால் அவுஸ்திரேலியா கடைசி டெஸ்டில் சிறப்பாக வெற்றி பெற்றது. பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலை ஆனது.

அடிலெய்டுவில் நடந்த 2ஆவது டெஸ்டில் இந்தியா வெற்றி பெற்றது. மெல்பேர்ன் டெஸ்டை வென்று அவுஸ்திரேலியா சமன் செய்தது.

தற்போது ஆவுஸ்திரேலியா செல்லும் விராட்கோலி தலைமையிலான இந்திய அணி முதல் முறையாக டெஸ்ட் தொடரை வெல்லுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் அவுஸ்திரேலிய மண்ணில் இந்தியா தொடரை கைப்பற்ற நல்ல வாய்ப்பு இருப்பதாக முன்னாள் தலைவரும் வர்ணனையாளருமான, சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில்,

நமது வீரர்கள் ஓட்டங்களைக் குவித்தால் வேகப்பந்து வீரர்களில் 20 விக்கெட்டுகளை வீழ்த்த இயலும். வேகப்பந்து வீச்சில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அப்படி நிகழும் பட்சத்தில் இந்தியா முதல் முறையாக அவுஸ்திரேலியாவில் தொடரை வெல்லும்.

11 பேர் கொண்ட அணியில் 3 வேகப்பந்து வீரர்கள் இடம் பெறுவார்கள். அவுஸ்திரேலிய ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் இருக்கும். வோர்னர், சுமித் இல்லாதது இந்திய அணிக்கு நல்ல வாய்ப்பாகும்.

என்னை பொறுத்தவரை ரோகித் சர்மாவை 11 பேர் கொண்ட அணியில் சேர்க்க வேண்டும். தற்போது துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் இருக்கும் அவர் 6ஆவது வீரர் வரிசைக்கு பொருத்தமானவர் என அவர் தெரிவித்தார். (க)

## போனால் போகட்டும் போடா ஐ.பி.எல்.போட்டி குறித்து மிட்செல்




2019 ஐபிஎல் தொடரில் கொல்கத்தா அணியிலிருந்து அவுஸ்திரேலிய வேகப்புயல் மிட்செல் ஸ்டார்க் விடுவிக்கப்பட்டுள்ளார். இதனை டெக்ஸ்ட் மெசேஜ் மூலம் மிட்செல் ஸ்டார்க்கிற்குத் தெரிவித்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி நிர்வாகம். இது குறித்து அவர் கூறுகையில், கொல்கத்தா அணி நிர்வாகிகளிடமிருந்து எனக்கு டெக்ஸ்ட் மெசேஜ் இருநாட்களுக்கு முன்பாக வந்தது. அதில் என்னை விடுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.


சிறு காயம்தான் மற்றபடி நான் நன்றாகத்தான் உணர்கிறேன். ஒரு சிறு காலகட்டம் உடல் காயம் பிரச்சினை கொடுத்தது இப்போது இல்லை. நான் அடுத்த ஐபிஎல் போட்டியில் விளையாடவில்லை என்றால் பரவாயில்லை, போனால் போகிறது. இதுவே எனக்கு இங்கிலாந்தில் 6 மாத கால பெரிய அளவிலான கிரிக்கெட்டுக்கு என்னைத் தயார்படுத்திக் கொள்ள பெரிய வாய்ப்பாக அமைந்ததாகக் கருதுகிறேன் என கூறியுள்ளார்.

2019இல் இங்கிலாந்து உலகக் கோப்பையை நடத்துகிறது. அது முடிந்தவுடன் ஓகஸ்டில் ஆஷஸ் தொடர் ஆரம்பமாகிறது. இதைத்தான் மிகப்பெரிய 6 மாதகால கிரிக்கெட் என்கிறார் மிட்செல் ஸ்டார்க். (க)

## ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி மாற்றப்படும் அணித் தலைவர்கள்







இந்தியாவில் நடைபெற்றுவரும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல் தொடரின் அடுத்தாண்டுக்கான போட்டியில் மூன்று அணிகள் தங்கள் தலைவர்களை மாற்ற வாய்ப்பிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவில் ஆண்டு தோறும் நடைபெற்று வரும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல். போட்டி அடுத்தாண்டும் நடைபெறவுள்ளது.

2019ஆம் ஆண்டு ஐபிஎல் தொடருக்கான வீரர்கள் ஏலம் வரும் டிசெம்பர் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் ஜெய்ப்பூரில் நடை பெற உள்ளது. ஆனால் இந்த ஐபிஎல் தொடருக்கு பல பிரச்சினைகள் இருக்கிறது. ஏனெனில் அடுத்தாண்டு மே மாதம் 3ஆம் திகதி இங்கிலாந்தில் உலகக்கோப்பை தொடர் நடைபெறவுள்ளது.

இதனால் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா அணிகளின் வீரர்கள் மே முதலாம் திகதிக்கும் பின் ஐபிஎல் தொடரில் விளையாட மாட்டார்கள் என்று கூறப்படுகிறது.

அதே போன்று தென்னாபிரிக்க அணியைச் சேர்ந்த வீரர்களும் மே 12ஆம் திகதிக்குள் சென்றுவிடுவார்கள் எனவும் கூறப்படுகிறது.

இந்த தகவல் உறுதியானால் இந்த மூன்று நாடுகளின் வீரர்களும் பல லீக் போட்டிகளிலும் குறிப்பாக பிளே-ஓப் சுற்றிலும் விளையாட மாட்டார்கள். அது அணிகளுக்கு பெரிய பின்னடைவாக இருக்கும். நியூசிலாந்து அணியின் வீரர்கள் மட்டும்தான் தொடர் முழுவதும் உறுதியாக விளையாடுவார்கள்.

ஏப்ரல், மே மாதத்தில் இந்தியாவில் பொதுத்தேர்தல் நடைபெற இருப்பதால்போட்டி அட்டவணைகள் வெளியிடுவதிலும் குழப்பம் நீடிக்கிறது.

இந்நிலையில் இந்த ஐபிஎல் தொடரில் மூன்று அணிகள் தங்கள் தலைவர்களை மாற்ற முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

### ராஜஸ்தான் ரோயல்ஸ்

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் தலைவராக இருக்கும் ரகானே தற்போது மாற்றப்பட்டு ஜோஸ் பட்லர் தலைவராக நியமிக்க அதிக வாய்ப்புகள் உள்ளது.

ஏனெனில் கடந்த ஆண்டு இவர் துடுப்பாட்டத்தில்சொதப்பியதால், இதன் காரணமாக அவரால் அணியை வழி நடத்த முடியவில்லை. தற்போது அவருக்கு பதிலாக பட்லர் நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.


### கிங்ஸ் லெவன் பஞ்சாப்

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவராக இருக்கும் ரவிச்சந்திரன் அஸ்வின் மாற்றப்பட்டு கே.எல்.ராகுல் அவருக்கு பதிலாக தலைவராக நியமிக்கபட வாய்ப்புகள் உள்ளன. சென்ற வருடம் ஓரளவுக்கு நன்றாக ஆடிய அணி இந்த வருடம் மேலும் நன்றாக ஆட வேண்டும் என்றால் அவர்களது தலைவரை மாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

### டில்லி டேர்டெவில்ஸ்

டில்லி டேர்டெவில்ஸ் அணியின் தலைவராக இருக்கும் ஸ்ரேயஸ் தற்போது தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டு சிகர் தவான் தலைவராக நியமிக்கப்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளன. (க)

## இந்தமுறை கோப்பை எமக்கே டிவில்லியர்ஸ் நம்பிக்கை



தென்னாபிரிக்க அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான 360 டிகிரி என அழைக்கப்படும். டிவில்லியர்ஸ் ஐபிஎல் தொடரை எதிர்பார்த்து கொண்டிருக்கிறார். இது குறித்து அவர் பிரபல ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு அளித்துள்ள பேட்டியில், அனைத்து இருபது-20 போட்டிகளை விட ஐ.பி.எல் உலகில் மிகப் பெரிய இருபது-20 போட்டி ஆகும்.

விராட் கோலி மற்றும் என், அணியான ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவின் சக வீரர்களுடன் மீண்டும் இணைய என்னால் நீண்ட நாள் காத்திருக்க முடியாது.

விரைவில் இணைய ஆவலாக இருக்கிறேன். இம்முறை 2018 தொடரின் ஏமாற்றங்களையெல்லாம் நாங்கள் அணியாகத் திரண்டு துடைத்தெறிவோம். ஆர்சிபி அணி ஐபிஎல் தொடரை வெல்லக் கூடிய ஆற்றல் உள்ளதுதான், ஆனால் இதுவரை ஏன் வெல்ல முடியவில்லை என்பது ஒருவருக்கும் தெரியாத புதிராக உள்ளது. இம்முறை 2019இல் நாங்கள் ஒரு அணியாக மிகவும் சவாலாக இருப்போம்.

இந்தியாவில் தேர்தல் நேரம் என்பதால், அப்போது இந்தியாவில் தொடர் நடக்குமா என்பது தெரியவில்லை. இந்தியாவில் ஐ.பி.எல் நடைபெறுவதுதான் சிறந்தது. காரணம் அந்த ரசிகர்கள் அபாரம், அவர்களை கேளிக்கைப்படுத்துவதுதான் முக்கியம்.

ஆனாலும் இதைவிடவும் முக்கிய காரணங்கள் இருந்தாலும் சரியான முடிவு எட்டப்படும் என்றே நினைக்கிறேன் என்று கூறியுள்ளார். (க)

## ரயிலுடன் கார்...

கடக்க முற்பட்ட காருடன் புகையிரதம் மோதி விபத்துக்குள்ளானதில்.காரில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்.அளவெட்டி மத்தியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நாகேந்திரன் ஜெகநாதன் (வயது 40) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி சென்று கொண்டிருந்த அதிசொகுசு புகையிரதம் நேற்று நண்பகல் யாழ்.நெளுங்குளத்திலுள்ள புகையிரத கடவையில் பயணித்துள்ளது.

அரியாலையில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் வாகன திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த குறித்த நபர் வாகன உதிரிப்பாகம் வாங்குவதற்காக காரில் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துள்ளார். அப்போது குறித்த புகையிரத கடவையை கடக்க முற்பட்ட போது எதிரே வந்த புகையிரதம் குறித்த காரை மோதியதில் கார் 75 மீற்றர் தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டுள்ளது. கார் முற்று முழுதாக சேதமடைந்துள்ளதுடன் அதில் பயணித்த குறித்த நபர் தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

குறித்த பாதுகாப்பற்ற புகையிரதக்கடவையில் சமிக்ஞை விளக்கு பொருத்தப்பட்டுள்ள போதிலும் பாதுகாப்பு கடவை பொருத்தப்படவில்லை. இந்த இடத்தில் இதுவரை 14 விபத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன் இரு இராணுவத்தினர் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமையினால், புகையிரத திணைக்களம் மற்றும் உரிய அதிகாரிகள், இந்தப் பகுதியில் பாதுகாப்பு வேலி அமைப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டுமென்றும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9-101)

## யுத்த களமான...

பாராளுமன்றம் நேற்று வியாழக்கிழமை காலை 10 மணிக்குக் கூடிய போது, பிரதமருக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் மகிந்த ராஜபக்ஷ அமர்ந்திருந்தார். ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியினர் பக்கம் இருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

சபையை சபாநாயகர் ஆரம்பித்தபோது, மகிந்த ராஜபக்ஷ அணியைச் சேர்ந்த தினேஸ் குணவர்தன எம்.பி உரையாற்ற முயற்சித்தார். இதற்கு கடுமையான எதிர்ப்பு எழுந்தது. சபாநாயகர் தினேஸ்குணவர்தனவை கடுமையாக விமர்சித்தார். இதனையடுத்து பிரதமர் ஆசனத்தில் அமர்ந்திருந்த மகிந்த ராஜபக்ஷவை உரையாற்ற அனுமதிப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

இதனையடுத்து மகிந்த ராஜபக்ஷ உரையாற்ற ஆரம்பித்தார். மகிந்த ராஜபக்ஷவின் உரைக்கு ஆரம்பம் முதலே இடையூறு ஏற்படுத்தப்பட்டது. கூச்சலுக்கு மத்தியில் மகிந்த ராஜபக்ஷ உரையாற்றி முடித்தார். இதன் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்லவிற்கு உரையாற்ற வாய்ப்பளிக்கப்பட்டது.

இதன்போது எழுந்த லக்ஸ்மன் கிரியெல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவின் உரையின் மீது நம்பிக்கையில்லை அதனால் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டும் எனக் கோரினார். இதற்குப் பதிலளித்த சபாநாயகர் அதனை தான் தீர்மானிக்க முடியாது எனவும், சபையில் பெரும்பான்மையினர் தீர்மானித்தால் வாக்கெடுப்பை நடத்த முடியும் எனக் கூறினார்.

மறுகணம் சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. சபாநாயகரின் ஆசனத்தை நோக்கி மகிந்த அணியினர் செல்ல ஆரம்பித்தனர். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சென்று சபாநாயகரை பாதுகாப்பதற்காக சூழ்ந்து கொண்டனர். இதனையடுத்து வாக்குவாதங்கள் மோசமடைந்தன.

இரண்டு எம்.பிக்களுக்கிடையே மோதல் போக்கும் ஏற்பட்டது. எனினும், சக எம்.பிக்கள் இவர்களை சமாதானப்படுத்திக் கொண்டிருந்த போது, திமுத் அமுனுகவின் கையில் காயம் ஏற்பட்டு ரத்தப் போக்கு ஏற்பட்டது. அவசரமாக அழைத்துச் செல்லப்பட்ட திமுத் அமுனுகம எம்.பிக்கு முதலுதவி சிகிச்சையளிக்கப்பட்டது.

தொடர்ந்து சபையை அமைதிப்படுத்த சபாநாயகர் கடுமையாக முயற்சித்துக் கொண்டிருந்தார். சுமார் 10 - 15 நிமிடங்கள் வரை சபாநாயகர் தொடர்ந்து முயற்சித்த போதும் அந்த முயற்சி வெற்றியளிக்காததை அடுத்து சபாநாயகர் தனது ஆசனத்தில் இருந்து எழுந்து சென்றார்.

இதன்பின்னர் மகிந்த ராஜபக்ஷவும், அதனைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்கவும் சபையை விட்டு வெளியேறிச் சென்றனர்.

பாராளுமன்றம் கூடியபோது, வெளிநாட்டு தூதுவர்கள், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் கூடியிருந்தனர். (ம)

## பெரும்பான்மை...

சபாநாயகர் கரு ஜயசூரிய, ஐக்கிய தேசிய முன்னணியின் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடித்த இந்த கலந்துரையாடலின்போது நாட்டில் தற்போது நிலவிவரும் அரசியல் நிலைமை தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பாராளுமன்றை மீண்டும் ஒருமுறை ஒத்திவைக்கமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று உத்தரவாத மளித்தார் என்று ஐக்கிய தேசிய முன்னணி தெரிவித்தது.

அத்துடன், இன்று பாராளுமன்றில் நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போது, உறுப்பினர்களின் பெயரைக் கூப்பிட்டு வாக்கைப் பதிவு செய்யுமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்திப்புத் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்ததாவது,

ஜனாதிபதியுடனான பேச்சுக்கள் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தன. அதனையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்தச் சந்திப்பின் போது இரண்டு விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்முடன் பேச்சு நடத்தியிருந்தார்.

முதலாவதாக, பாராளுமன்றத்தின் பெரும்பான்மையினை கருத்திற் கொண்டு ஜனநாயக ரீதியாகவும் சுயாதீனமாகவும் தான் நடந்து கொள்வதாக வாக்குறுதி அளித்திருக்கிறார். அதுமட்டுமின்றி நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற குழப்பநிலை தொடர்பில் அதிருப்தியையும், கண்டனத்தையும் வெளியிட்டிருந்தார்.

அத்துடன் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெறுவோருக்கு ஆட்சி வழங்கப்படும் என்றும் நாடு இன்னும் ஓரிரு தினங்களில் வழமைக்கு திரும்பும் எனவும் இதன்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் இதன்போது மற்றுமொரு விடயம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அந்த விடயத்தை என்னால் பகிரங்கமாக தற்போது வெளியிட முடியாது என்றார். (ம)

## தேர்தலுக்கு...

கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் அமைப்புக்கு அமைய எந்தவொரு தேர்தலும் நடத்தப்படவேண்டும். பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளாவிட்டால், பாராளுமன்றில் மீளவும் பெரும்பான்மையை நிரூபிக்கத் தயாராகவே உள்ளோம் என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நேரத்தில் நடத்துமாறு அரசுக்கு சவால் விடுப்பதாக, முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அத்துடன் மகிந்தவுக்கும் நாம் சவால் விடுக்கின்றோம். அதிக நாள்கள் செல்ல முன்னர் 70 இலட்சத்துக்கு அதிகமான மக்கள் அவரை துரத்த தயாராகவிருக்கின்றனர்.

நாம் 10 தேர்தல்களுக்கு தயாராகவிருக்கின்றோம். ஜனநாயக ரீதியான தேர்தலுக்கு நாம் தயார். எமக்கு ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒன்றாகத் தாருங்கள் என்றும் சம்பிக்க கூறினார்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக வாழ்க்கையை அர்ப்பணிக்கவும் தயாராகவிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு தெரிவித்துள்ளார்.(ம)

## இரு நாட்களில்...

வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்ததாக மனோ கணேசன் குறிப்பிட்டார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவும் 2 அல்லது 3 நாட்களில் நாட்டின் குழப்ப சூழ்நிலைக்கான தீர்வினை ஜனாதிபதி வழங்குவார் என கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழில் ‘கஜா’...

வேகம் அதிகரித்து காணப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 80-90 கிலோ மீற்றர் வரை வீசியது.

மன்னார், புத்தளம், திருகோணமலை, அநுராதபுரம், பொலன்னறுவை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 60-70 கிலோ மீற்றர் வரை காணப்பட்டது. மழை வீழ்ச்சி சிறிதாக ஏற்பட்டிருந்தது.

கடல் மிகவும் கொந்தளிப்பாகவும் உயர் அலைகளுடனும் காணப்பட்டதால் அப்பகுதியில் இருந்த மக்கள் வெளியேறியிருந்தனர்.

இடை இடையே மின்சாரம் தடைப்பட்டதுடன் சில இடங்களில் கூரைகள் தூக்கி வீசப்பட்டும் மரங்கள் முறிந்தும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

நேற்று இரவு 11 மணி வரை பாரிய சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்பதுடன் அனைத்து தரப்பினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுவதற்கு தயார் நிலையில் உள்ளார்கள் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ம-9-60)

## பெற்றோல், டீச...

என்பனவற்றின் விலைகள் தலா 5 ரூபாயால் குறைக்கப்படுகிறது.

எரிபொருள்களின் விலையை நேற்று நள்ளிரவுடன் குறைக்க உத்தரவிட்டுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றில் நேற்று தெரிவித்திருந்தார். (ம)

## ஐ.தே.க கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்; வீதிகள் பல முடக்கம்



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்ட பேரணியொன்றை முன்னெடுத்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்திற்கு பெரும்பான்மை இல்லையென தெரிவித்தும், அரசியலமைப்பை மீறி ஜனாதிபதி செயற்படுவதாக குற்றஞ்சாட்டியும் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்று மாலை 3 மணிக்கு ஆரம்பமான குறித்த ஆர்ப்பாட்டம், பேரணியாக சென்றது. இதனால் பல வீதிகளின் வாகன போக்குவரத்து முடக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ம)

## பிரதமர் பதவி எனக்கு பெரிய விடயமல்ல- மகிந்த



(கொழும்பு)

நான் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் இருந்தவர் என்றும் பிரதமர் பதவி எனக்கு பெரிய விடயமல்ல எனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வில் விசேட உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். முன்னாள் அரசாங்கத்தினால் நாட்டின் பிரச்சினையைத் தீர்க்கமுடியாத காரணத்தினால், ஜனாதிபதியால் நான் பிரதமராக நியமிக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் பேசிய பிரதமர், உரத்து சப்தமிடுவதன் மூலம் நம்பிக்கையில்லா பிரேரணையை நிறைவேற்ற முடியாது என கூறினார்.

பாராளுமன்றத்தில் நிலவும் பிரச்சினை தொடர்பான தீர்வை வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்காக, பொதுத் தேர்தலை நடத்த வேண்டும். எனவே, பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவளிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

இதன்பின்னர், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் விசேட உரையை நம்பமுடியாதெனத் தெரிவித்து, ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கொண்டுவந்த பிரேரணை மீதான வாக்கெடுப்பை மேற்கொள்ள முயற்சித்த சந்தர்ப்பத்தில், அங்கு அமளிதுமளி ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பாராளுமன்ற சபையிலிருந்து சபாநாயகர் வெளிநடப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


**கொவிசெத**

திகதி 2018.11.15
சீட்டிழுப்பு இலக்கம் 1944
ஆங்கில எழுத்து: O
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 40 47 51 69
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**

திகதி 2018/11/15
சீட்டிழுப்பு இலக்கம் 3790
ஆங்கில எழுத்து: P
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 5 9 0 4 2 0
தேசிய லொத்தர் சபை

**வாசனா சம்பத**

சீட்டிழுப்பு இலக்கம் 1518 திகதி 15/11/2018
Y D O
வெற்றி இலக்கங்கள்: 8 45 65 72
போனஸ் இலக்கம்: 17
தேசிய லொத்தர் சபை

**நீரோகா**

திகதி 2018/11/15
சீட்டிழுப்பு இலக்கம் 473
லக்கினம்: விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 06 07 22 31 18
தேசிய லொத்தர் சபை

## சாரதி தேவை

பத்துச்சில்லு லொறிகளுக்கு சாரதிகள் தேவை. முன்பு வேலை செய்த இடத்தில் இருந்து விலகல் கடிதம் பெற்றுக்கொண்டு நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்

இல.55/57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-4402)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELs

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-4381)


## 14 வயது மாண...

குளம் பிரமண்டு வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவர் வேறு மாணவர்களுடன் பட்டக்காட்டுகுளத்திற்கு குளிக்கச் சென்றுள்ளார். இதன்போது இரு மாணவர்கள் குளத்தின் ஆழமான பகுதிக்குச் சென்றமையால் நீரில் மூழ்கியுள்ளனர்.

இதன்போது மாணவன் ஒருவன் கூக்குரலிட்ட போது அயலில் வசித்தவர்கள் குளத்திற்கு சென்று நீரில் மூழ்கிய இரு மாணவர்களையும் மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். இருப்பினும் ஒரு மாணவன் நீரில் மூழ்கியமையால் மரணமடைந்த நிலையிலேயே மீட்கப்பட்டார்.

நீரில் மூழ்கி மரணமடைந்த மாணவன் 14 வயது உடைய வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் வசிக்கும் உதயகுமார் றொசான் என்பவராவார். தாய், தந்தையர் இல்லாத நிலையில் உறவினர் வீட்டில் தனது சகோதரியுடன் வசித்து வந்த நிலையிலேயே குறித்த மாணவன் மரணமடைந்துள்ளான்.

மாணவனது சடலம் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)

## மூன்று பெண்...

யில் இந்தியாவுக்கு சென்று சிகிச்சை பெற்று கர்ப்பம் தரித்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் பிரசவ வலி ஏற்பட்டதன் காரணமாக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு 3 பெண் குழந்தைகளை குறித்த தாய் பிரசவித்துள்ளார். இந்த நிலையில் அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டுள்ளது. சிகிச்சை வழங்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு குறித்த பெண் உயிரிழந்துள்ளார். எனினும் குழந்தைகள் மூவரும் வைத்தியசாலையில் நலமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-9)

## சபாநாயகர் கரு...

ழ்வுகளை அறிக்கையிடும் மூத்த பத்திரிகையாளராவார்.

சபாநாயகரை முற்றுகையிட்டு அவரைத் தாக்கும் நோக்குடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாராகவிருந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற அமர்வு ஒன்றைக் கூட்டுவதற்கு 55 லட்சம் ரூபாய் பணம் செலவிடப்படுகிறது. நேற்றைய தினம் பாராளுமன்றை கூட்டிய போது, சபாநாயகரது கடமையைச் செய்யவிடாது சபை நடவடிக்கைகளை மகிந்த தரப்பினர் குழப்பினர் என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்துள்ளனர். (ம)

## பாராளுமன்றில்...

பாராளுமன்ற உறுப்பினர் அமுனு கமவின் கையில் இரத்தக் காயம் ஏற்பட்டதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களே காரணம். பாராளுமன்ற உறுப்பினர் லித தேவப்பெரும கையில் கத்தியை வைத்திருந்தார். எனினும் அதற்கான ஆதாரம் என்னிடம் இல்லை என்று எஸ்.பி.திசாநாயக்க செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித தேவப் பெரும கையில் கத்தியுடன் முரண்பட்டுக் கொள்கின்ற ஒளிப்படங்களை கொழும்பு சிங்கள தொலைக் காட்சி சேவையின் செய்தியாளர் ஒருவர் வெளியிட்டுள்ளார். (ம)


## காணி விற்பனைக்கு

வல்வெட்டி, இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முன்பாக 4 1/2 பரப்பு வீடு கட்டுவதற்கு உரிய காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:

077 218 3674

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## வேலைவாய்ப்பு

நீங்கள் தொழில் தேடுபவரா?

உலகளாவிய ரீதியில் விஸ்தரித்து இயங்கி வரும் எமது சர்வதேச கம்பனிக்கு O/L, A/L படித்த இளைஞர் யுவதிகள் தேவை.

- கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசத்தினர் விரும்பத்தக்கது.
- தங்குமிட வசதிகள் உண்டு.
- வயதெல்லை 18 - 30.

தொடர்பு: 076 459 8925

## பணியாளர் தேவை

முன்னணி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

- சிற்றூழியர் (பெண்)
- வகுப்பு மேற்பார்வையாளர் (பெண்)
- கணனி பதிவாளர் (பெண்)

23.11.2018 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நேர்முகத் தேர்வுக்கு நேரில் சமுகமளிக்கவும்.

New Science World
Brown Road, Navalar Road Junction, Jaffna.
T.P: 077 336 4055, 021 222 6690 (C-4416)

## நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு

நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய

37 வருடங்களாக மாத்தளையில் சேவையாற்றிய பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணரின் சேவை தற்போது பரந்தனிலும் யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக...

(இலங்கையில் உள்ள ஐந்து பிரபல ஹோமியோபதி நிபுணர்களில் ஒருவர்)

கிளினிக் நடைபெறும் திகதி:
பரந்தனில் 17.11.2018 நாளைய தினம்
யாழ்ப்பாணத்தில் 24.11.2018

90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்

I.A.S. HOSPITAL ஐ.ஏ.எஸ் மருத்துவமனை

இல.101, பிரதான வீதி, (2-ம் குறுக்குத் தெரு சந்தியில்) யாழ்ப்பாணம்.

பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டடம், பரந்தன் சந்தி, பரந்தன்

தொடர்பு: 0774441082, 0774405969 (C-4424)

## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION MONEY TRANSFER 070 330 5500 WESTERN UNION MONEY TRANSFER

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை (C-439)

(6424)

## இலங்கை அதிபர் சேவை - 3 (SLPS -3)

விசேட கருத்தரங்கு

பிரதி சனிக்கிழமைகளில் மட்டும்
9am - 2pm 4th class 17/11/2018
P.கமல்தாசன் - SLPS
A.சுபாகரன் - SLEAS (9am-12pm விடய ஆய்வு)
A.K.கீர்த்தி -MA (Tamil) (12pm-2pm கிரகித்தல்)

நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 111 6739, 077 469 6695 (C-4421)

P.உமாசங்கர் & துறைசார் வளவாளர்களின்

SLPS (அதிபர் சேவை) கருத்தரங்கு தொடர் 18/11/2018 ஞாயிறு 9.00 - 3.00pm
P.உமாசங்கர்
A.பௌநந்தி
கிரகித்தல் & பொது உளச்சார்பு

SLAS (OPEN) நேர்முகப் பரீட்சைக்கான கலந்துரையாடல் 18.11 ஞாயிறு 9.30am

SLAS,SLEAS கருத்தரங்கு நடைபெறுகின்றது.

இவ்வளவாளர்களின் விரிவுரைகள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்
தொ.பே: 0774696695


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

கடந்த (17.10.2018) புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

மலர்வு 15 . 02 . 1938



உதிர்வு 17 . 10 . 2018

### அமரர் கனகசபாபதி பூரணம்

(பஞ்சாமிர்தம், பிரபல வாழைப்பழ வியாபாரி - சாவகச்சேரி)

கனகசபாபதி பூரணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.11.2018) வெள்ளிக் கிழமை காலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் நாளை மறு தினம் (18.11.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் சபிண்டீகரண கிரியையும் இடம்பெறும். அத்தருணம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு, நீர்வேலி. (சி-4428) தகவல்: குடும்பத்தினர்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (05/10/2018) வெள்ளிக்கிழமை
இறைபதமடைந்த
எமது குடும்ப ஒளிவிளக்கு

### அமரர் நல்லநாதன் ஜேக்குமார்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16/11/2018) வெள்ளிக்கிமை காலை 9 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 18/11/2018 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்னாரின் தாயாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் இக்கிரியைகளில் கலந்து கொண்டு மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இல.55, 5-ம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர். (6462)

- பெற்றோர் மற்றும் சகோதர, சகோதரிகள்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.